Follow us:

# தமிழன்

THAMILAN தமிලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 519 சுபகிருது வருடம், சித்திரை மாதம் 29ஆம் திகதி வியாழக்கிழமை
(12.05.2022) ஹிஜ்ரி - 1443, ஷவ்வால் - 10 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

## வன்முறைகளை கட்டுப்படுத்தும் அதிகாரம் பொலிஸாருக்கும்

துப்பாக்கிச் சூடு நடத்தவும் அனுமதி

02 பக்கம்

## சட்டவாட்சியை பாதுகாக்கும் நிறுவனங்கள் மோதல் சூழ்நிலைகளில் ஒத்துழைக்கவில்லை

மனித உரிமைகள் ஆணைக்குழு

02 பக்கம்

# தீர்வின்றேல் பதவி துறப்பேன்!

## இரு வாரங்களுக்குள் அரசியல் ஸ்திரத்தன்மை தேவை என்கிறார் மத்திய வங்கி ஆளுநர்

யோ.தர்மராஜ்

நாட்டின் தற்போதைய பதற்றநிலை இன்னும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு தொடருமாக இருந்தால் எரிபொருள், எரிவாயு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுவதுடன், 10 – 12 மணி நேர மின்வெட்டையும் எதிர்கொள்ள வேண்டி வரும் என மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

அத்தோடு, அடுத்த இரு வாரங்களுக்குள் நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி, நெருக்கடிக்கு தீர்வு காண முயற்சிக்கவில்லை என்றால் மத்திய வங்கி ஆளுநர் பதவியை தான் தொடரப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மத்திய வங்கி வளாகத்தில் நேற்று (11) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,அமைதியான முறையில் போராடிக் கொண்டிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியதை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். அதன்பின்னர் ஏற்பட்ட சம்பவங்களும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

02 பக்கம்



# பிரதமராகிறார் ரணில்!



யோ.தர்மராஜ்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை புதிய பிரதமராக நியமிப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசித்து வருவதாக நம்பகரமான வட்டார தகவல்கள் நேற்றிரவு தமிழன் செய்திகளிடம் தெரிவித்தன.

02 பக்கம்



# இவ்வாரத்திற்குள் புதிய அரசு

## ஜனாதிபதி நேற்று அறிவிப்பு!

02 பக்கம்

## பதற்றத்தை தணிக்க வேண்டுமாயின்

# மஹிந்த உள்ளிட்டோரை கைதுசெய்க!



### அநுரகுமார திசாநாயக்க வலியுறுத்து

யோ.தர்மராஜ்

நாட்டில் நிலவும் பதற்றத்தை தவிர்க்க வேண்டுமாயின் முதலில் இந்த வன்முறையை ஏற்படுத்துவதற்கு காரணமாக இருந்த முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பிரதேச சபை உறுப்பினர்களை உடனடியாக கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு... 02 பக்கம்

# இராணுவ ஆட்சி என்ற பேச்சுக்கே இடமில்லை!

பாதுகாப்புச் செயலாளர் திட்டவட்டம்

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..



கிழக்கில தான் பாதுகாப்பு எண்டு மஹிந்த போயிருப் பாரானால் வடக்கு கிழக்கில படைகளின் பிரசன்னம் அதிகரிப்பெண்டு வாற செய்திகளில் பொய் இல்லை என்னங்கோ...

## ஆர்ப்பாட்டத்தை கலைக்க இராணுவமா?

# அதிருப்தியை வெளியிட்டது அமெரிக்கா



இலங்கை மக்களுடைய அன்றாட வாழ்க்கையில் இராணுவ பிரசன்னத்தை ஈடுபடுத்தியமை தொடர்பில் அமெரிக்கா கவனம் செலுத்தியுள்ளது. 02 பக்கம்

## மஹிந்தவின் பாதுகாப்பு கருதியே

# திருகோணமலையில் தங்கவைப்பு

### கமல் குணரத்ன தெரிவிப்பு



யோ.தர்மராஜ்

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அலரிமாளிகையில் தொடர்ந்து இருப்பது அவருடைய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்பதனாலேயே... 02 பக்கம்

## உஷ்



வீடுகள் தீவைக்கப்பட்டதால் லெப்டொப் எல்லாம் எரிந்துவிட்டதாகவும் அதனால் கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் சூம் செயலியூடாக கலந்துகொள்ளமுடியாது என்றும் கட்சித்தலைவர்கள் நேற்று சபாநாயகருக்கு அறிவித்துவிட்டனராம். அதேபோல சிலருக்கு சூம் செயலியை பாவிக்கத் தெரியாததால் அவர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லையாம்.

## மெகசின் சிறைச்சாலையில் பரவும் வைரஸ் காய்ச்சல்

### தமிழ் அரசியல் கைதிகள் பாதிப்பு



புதிய மெகசின் சிறைச் சாலையில் ஒரு வகை வைரஸ் காய்ச்சல் பரவி வருகிறது. இதனால் தமிழ் அரசியல் கைதிகள் பலரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என குரலற்றவர்களின்...

02 பக்கம்

## மூன்று அமைச்சுகளுக்கான

# செயலர்கள் மீண்டும் நியமனம்

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, மக்களின் இயல்பு வாழ்க்கையை பேணுவதற்கான பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நிதி அமைச்சுகளுக்கான செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். குறித்த அமைச்சுகளின் செயலாளர்களாக ஏற்கனவே கடமையாற்றிய செயலாளர்களே, நேற்று முதல் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. 02 பக்கம்

## மக்கள் மத்தியில் ராஜபக்ஷக்களின் மதிப்பு வீழ்ச்சி

# தேசியவாதத்தின் மட்டுப்பாடுகளை காட்டுகிறது!

### த இந்து ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டு

வீறுமிக்க தேசியவாதமும் பெரும்பான்மையினவாத அணிதிரட்டலும் என்றென்றைக்குமே முடிவற்றதாக இருக்கக்கூடிய ஆதரவுத் தளம் அல்ல என்பதும், மக்கள் பொருளாதார இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்கும்போது அந்த ஆதரவு தளத்தினால் பயனில்லை என்பதுமே ராஜபக்ஷ குறியீட்டின் முடிவில் இருந்து வெளிப்படும் பெரிய செய்தியாகும். 02 பக்கம்

THE HINDU

## நிலைமை சீரானால் 17ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வு நடக்கும்

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை தணிந்து நிலைமை சீரானால் மாத்திரமே எதிர்வரும் 17ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வை ஆரம்பிக்கமுடியுமென நேற்றுமாலை சூம் செயலி ஊடாக நடந்த கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் சபாநாயகர் தெரிவித்தார்.

02 பக்கம்

## ஏழரை மணித்தியாலங்கள் மின் துண்டிப்புக்கு சாத்தியம்



மின்சார சபைக்கு தேவையான எரிபொருள் கிடைக்காவிடின், எதிர்வரும் நாட்களில் மின்சாரம் துண்டிக்கப்படும் நேரத்தை ஏழரை மணித்தியாலங்களாக நீடிக்க நேரிடும் என இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

எண்ணெய் பெற்றுக்கொள்வதற்காக தொடர்ந்தும் இலங்கை மின்சார சபையினால் கோரிக்கை விடுக்கப்படுகின்ற போதிலும்...

02 பக்கம்

## இவ்வாரத்திற்குள்...

நாடாளுமன்ற பெரும்பான்மையை கொண்ட புதிய பிரதமரை அமைச்சரவையை இவ்வாரத்திற்குள் நியமிப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது ,

ஆட்சியமைக்க பலரை அழைத்து பின்னர் ஒரு புதிய மாற்றத்துடன் அமைச்சரவையை நியமித்தேன். அதன் பின்னர் நல்ல விடயங்கள் நடந்தாலும் கடந்த 9 ஆம் திகதி துரதிர்ஷ்ட சம்பவங்கள் நடந்தேறின. உயிரிழப்புகள் இடம்பெற்றதுடன், சொத்துகள் சேதப்படுத்தப்பட்டன. இதற்கு காரணமான ஆரம்ப சம்பவத்தை கண்டிக்கிறேன். அதற்கு நீதியான விசாரணை நடத்தப் பணித்துள்ளேன். நாடாளுமன்ற பெரும்பான்மையைக் கொண்ட புதிய பிரதமரை, அமைச்சரவையை இவ்வாரத்திற்குள் நியமிப்பேன்.

புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டவுடன் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான பேச்சுகள் ஆரம்பிக்கப்படும். அத்துடன் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை மீண்டும் நடைமுறைக்கு கொண்டுவரும் ஏற்பாடுகள் பரிசீலிக்கப்படும் என்றார் ஜனாதிபதி.

## மக்கள் மத்தியில்...

இவ்வாறு இந்தியாவிலிருந்து வெளிவரும் த இந்து பத்திரிகை தனது நேற்றைய ஆசிரிய தலையங்கத்தில் தெரிவித்துள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சிக்கு எதிரான பரந்தளவிலான மக்கள் கிளர்ச்சியின் ஒரு பகுதியாக மூண்டிருக்கும் அசாதாரணமான வன்முறைகளுக்கு மத்தியில் அவரது பதவி விலகல் கடந்த ஒன்றரை தசாப்த காலத்தின் பெரும்பகுதி பூராவும் நாட்டில் ஆதிக்கம் செலுத்திக்கொண்டுவந்த அரசியல் குறியீடு(Political brand) ஒன்றின் சடுதியான வீழ்ச்சியைக் குறித்துநிற்கிறது.

விடுதலை புலிகளைத் தோற்கடித்த தேசிய வீரன் என்று பெரும்பான்மையினத்தவர்களான சிங்களவர்களில் பெரும் பகுதியினராலும் மதித்துப் போற்றப்பட்ட மஹிந்த, தன்னை மொய்த்திருந்த மக்கள் ஆதரவுத்தளத்தை கிளர்ந்தெழுந்திருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்கள் பதிலீடு செய்வார்கள் என்றோ உத்தியோகபூர்வ வாசஸ்தலமான கொழும்பு அலரிமாளிகையில் இருந்து பாதுகாப்புத் தேடி தான் வெளியேறவேண்டியிருக்கும் என்றோ ஒருபோதும் கற்பனை செய்துபார்த்திருக்கமாட்டார்.

பொருளாதார நெருக்கடி தாங்கிக்கொள்ளமுடியாததாக மாறியிருக்கும் நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உட்பட பல்வேறு உயர்பதவிகளை வகிக்கும் சகல ராஜபக்ஷக்களும் பதவிவிலக வேண்டும் என்று ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரி நிற்கிறார்கள். அத்தியாவசிய உணவுப்பொருட்கள், மருந்துவகைகள் மற்றும் எரிபொருட்களுக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. கிடைக்கக்கூடியதாக இருக்கின்ற பொருட்களை வாங்கவும் மக்களிடம் வசதியில்லை.

வெளிநாட்டு உதவிகள் மூலம் பொருளாதார நெருக்கடியை குறுகிய காலத்துக்கேனும் சமாளிப்பதற்கு நாடு நடவடிக்கைகளில் இறங்கியிருக்கும் நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன்னர் வரை ராஜபக்ஷக்கள் ஆர்ப்பாட்டக்காரர்களின் கோரிக்கைகளை காதில் வாங்கிக்கொள்ளவில்லை என்றே தோன்றுகிறது. ஆனால், ஆர்ப்பாட்டங்கள் தீவிரமடையவே ஜனாதிபதி தனது மூத்த சகோதரர் பிரதமர் பதவியில் இருந்து விலகுவதை விரும்பினார் என்று தெரிகிறது.

அரசியல் உறுதிப்பாடின்மைக்கு மத்தியில், கொழும்பில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பிரதமரின் ஆதரவாளர்கள் என்று கூறப்படுபவர்களினால் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. அதன் விளைவாக சிலர் மரணமடைந்தனர். பெருவாரியானோர் காயமடைந்தனர். அம்பாந்தோட்டையில் உள்ள ராஜபக்ஷக்களின் மூதாதையரின் இல்லம் உட்பட அரசியல் தலைவர்கள் பலரின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

மஹிந்தவின் பதவி விலகல் ஆர்ப்பாட்டக்காரர் களை அமைதிப்படுத்த போதுமானதாக இல்லாமல் இருக்கலாம். அரசியல் உறுதிப்பாடின்மை தொடரக்கூடும். பிரதமர் பதவியைப் பொறுப்பேற்கக்கூடிய எவரும் இப்போது மக்களின் நம்பிக்கையைப் பெற்றவராகவும் பொருளாதார மீட்சியை நோக்கி நாட்டை வழிநடத்தக்கூடிய துணிவாற்றலுடையவராகவும் இருக்க வேண்டும்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவைக்கொண்ட ஒருவரை ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவுசெய்யவேண்டியிருக்கும். ஆனால், ராஜபக்ஷ ஆட்சியுடன் சேர்ந்து செயற்பட்ட எவரையும் அவர் தெரிவுசெய்வதை மக்களின் தற்போதைய சீற்றம் தடுக்கும்.

ஜனாதிபதி ராஜபக்ஷவின் கீழ் அரசாங்கம் ஒன்றுக்கு தலைமைதாங்க வருமாறு விடுக்கப்பட்ட அழைப்பை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஏற்கனவே நிராகரித்துவிட்டார்.

இந்தியாவைப் பொறுத்தவரை, இந்த நெருக்கடியில் இலங்கைக்கும் 3.5 பில்லியன் டொலர்கள் பெறுமதியான நிதியுதவியையும் பொருளுதவியையும் செய்திருக்கிறது. இலங்கையின் இன்றைய நிலைவரம் இந்தியாவுக்கு ஒரு பிரத்தியேகமான திரிசங்கு நிலையை ஏற்படுத்தியிருக்கிறது; அது தொடர்ந்து இலங்கைக்கு வழங்குகின்ற ஆதரவு மக்கள் செல்வாக்கை இழந்துவிட்ட ஆட்சியொன்று பதவியில் தொடருவதற்கு வழங்கப்படும் ஆதரவாக நோக்கப்படக்கூடாது; அதேவேளை அத்தியாவசியப் பொருட்களுக்கு இலங்கையில் தட்டுப்பாடு தொடரும் நிலையில் இந்தியா பராமுகமாக இருந்து சாதாரண மக்களை அவலத்தில் விடவும் முடியாது.

இலங்கையின் ஜனநாயகம், உறுதிப்பாடு மற்றும் பொருளாதார மீட்சி ஆகியவற்றுக்கு ஆதரவளிப்பதாகவும் ஜனநாயக செயன்முறைகளினால் வெளிப்படுத்தப்படுகின்ற இலங்கை மக்களின் நலன்களை மனதில் கொண்டதாகவே அந்த ஆதரவு இருக்கும் என்றும் இந்தியா கூறியிருக்கிறது. அந்த ஆதரவு தற்போதைய ஆட்சிக்கு அளிக்கப்படுகின்ற அரசியல் ஆதரவாக நோக்கப்படாமல் மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை கொடுப்பதாகவே நோக்கப்படவேண்டும்.

வீறுமிக்க தேசியவாதமும் பெரும்பான்மையினவாத அணிதிரட்டலும் என்றென்றைக்குமே முடிவற்றதாக இருக்கக்கூடிய ஆதரவுத் தளம் அல்ல என்பதும் மக்கள் பொருளாதார இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்கும்போது அந்த ஆதரவு தளத்தினால் பயனில்லை என்பதுமே ராஜபக்ஷ குறியீட்டின் முடிவில் இருந்து வெளிப்படும் பெரிய செய்தியாகும்.

***(தி இந்து - ஆசிரிய தலையங்கம் 11 மே 2022)***

## பதற்றத்தை தணிக்க...

அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று (11) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் நிலவும் பதற்றத்தை தவிர்க்க வேண்டுமாயின் முதலில் இந்த வன்முறையை ஏற்படுத்துவதற்கு அலரிமாளிகையிலிருந்த சூழ்ச்சிக்காரர்களை உடனடியாக கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். அதன்படி, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்கள், பிரதேச சபை தலைவர்கள், உறுப்பினர்கள் என அனைவரும் தங்களுடைய அரச அதிகாரத்தை பயன்படுத்தி, வன்முறையை ஏற்படுத்தியது தற்போது தெளிவாகியுள்ளது. எனவே, அரசாங்கம் இவர்களை உடனடியாக கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்.

சாதாரண கோரிக்கையை முன்வைத்து மக்கள் முன்னெடுத்த போராட்டமானது, வன்முறை சம்பவங்கள், கொள்ளைச்சம்பவங்கள் மற்றும் தனி நபர் பழிவாங்கல் சம்பவங்கள் வரை மாற்றமடைந்துள்ளன. சட்டத்துக்கு பொறுப்பான நிறுவனங்கள், நாட்டில் வன்முறைகள் பரவாத வகையில் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொலிஸ்மா அதிபர் மற்றும் பொலிஸாரும் நாட்டில் வன்முறைகள் ஏற்படாதவாறு தங்களுக்குள்ள பொறுப்பை முறையாக நிறைவேற்ற வேண்டும். எனவே, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள வன்முறைகள், கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் தனி நபர் பழிவாங்கல்களை தடுப்பதற்கு அரசாங்கம் தலையிட வேண்டும். அதேபோன்று, நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்காக முழு நாட்டு மக்களும் வன்முறைகளை முற்றாக நிராகரிக்க வேண்டும் - என்றார்.

## மூன்று அமைச்சுகளுக்கான...

இதன் பிரகாரம், பாதுகாப்பு செயலாளராக ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் மீண்டும் நியமனம் பெற்றுள்ளார்.

நிதி அமைச்சின் செயலாளராக கே.எம். மஹிந்த சிறிவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஆர்ப்பாட்டத்தை கலைக்க...

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் நெட் பிறைஸ்(Ned Price) இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளார்.

அமைதியான ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்துவதற்காக, இராணுவத்தை ஈடுபடுத்துகின்றமை தொடர்பில் மிகவும் அதிருப்தியடைந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் தற்போது நடைபெறுகின்ற வன்முறை செயற்பாடுகள் தொடர்பில் அதிருப்தி அடைவதாகவும் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் ஊடகப்பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வன்முறையில் ஈடுபடுகின்ற அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

## ஏழரை மணித்தியாலங்கள்...

இதுவரை உரிய பதில் கிடைக்கவில்லை என பொறியியலாளர் சங்கத்தின் இணை செயலாளர் எரங்க குடாஹேவா கூறியுள்ளார்.

நேற்றும் 3 மணித்தியாலங்கள் 20 நிமிடங்களுக்கு மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப் பட்டுள்ளதால், மின்சாரத்திற்கான கேள்வி குறைடைந்துள்ளதாகவும் இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம் கூறியுள்ளது.

எரிபொருள் கிடைக்காவிடின், ஊரடங்கு சட்டம் நீக்கப்பட்டதும், பகல் வேளையில் 5 மணித்தியாலங்களும், இரவு வேளையில் இரண்டரை மணித்தியாலங்களும் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் சாத்தியமுள்ளதாக இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கத்தின் இணைச் செயலாளர் எரங்க குடாஹேவா குறிப்பிட்டுள்ளார்.

## வன்முறைகளை...

***யோ.தர்மராஜ்***

நாட்டில் தேவையற்ற வன்முறைகளை ஏற்படுத்தி உயிர்ச்சேதங்கள், சொத்துகளுக்கு சேதம் விளைவிப்பதற்கு முயற்சிப்பவர்களை தடுப்பதற்கு அதிகபட்ச அதிகாரத்தையும் தேவையான நேரத்தில் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்ளவும் பொலிஸாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அமைதியின்மையை ஏற்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்களை பயன்படுத்தி மக்களை ஒன்றுசேர்த்த 59 சமூக ஊடகக் குழுக்களுக்கு எதிராகவும் அதன் பயனாளர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று (11) வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 9ஆம் திகதி மற்றும் அதன் பின்னர் ஏற்பட்ட கலவரமான நிலைமையில், நடந்த உயிரிழப்புகள், வீடுகள், வாகனங்கள் உட்பட பல சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துவதற்காக பல்வேறு சமூக வலைத்தளங்கள் மற்றும் சமூக ஊடகக் குழுக்களை பயன்படுத்தி, வன்முறையை ஏற்படுத்தும் நபர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்ட பதற்றமான நிலைமையின் போது வன்முறையை தூண்டிய 59 சமூக ஊடக குழுக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவற்றின் நிர்வாகிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த 9ஆம் திகதி நாடு முழுவதும் ஏற்பட்ட பதற்றமான நிலைமையில், சமூக ஊடகங்கள் ஊடாக வன்முறையை தூண்டினர் என கண்டறியப்பட்டால், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். தவறிழைத்தது உறுதி செய்யப்பட்டால் 5 வருடங்களுக்கு சிறைத் தண்டனையும் விதிக்கப்படும்.

அத்துடன் இவ்வாறு சமூக ஊடகங்களை பயன்படுத்தி தூண்டிய குழுக்கள் மற்றும் தகவல்களை பகிர்ந்த நபர்கள் பற்றிய தகவல்கள் தெரிந்தால், அவை குறித்து பொலிஸாருக்கு 1997 என்ற இலக்கத்தின் ஊடாக அறிவிக்கவும்.

இதேவேளை, கலவரத்தை ஏற்படுத்தும் வகையிலும் கொள்ளையடிக்கும் நோக்கிலும் உயிர்ச் சேதங்கள், வாகனங்களுக்கு சேதம் விளைவித்தல், சோதனையிடுதல், அரச சொத்துகள் மற்றும் தனியார் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தல் மற்றும் பாரிய காயங்களை ஏற்படுத்தும் வகையில் யாரேனும் செயற்பட்டால் அவர்களை தடுப்பதற்கு உயர்ந்தபட்ச அதிகாரத்தை பயன்படுத்தவும் தேவையான நேரத்தில் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்வதற்கும் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அதிகாரம் வழங்கப்படுகின்றது.

## நிலைமை சீரானால்...

சுமார் இரண்டு மணிநேரம் நடந்த இந்த கூட்டத்தின்போது, நாட்டில் புதிய பிரதமர் மற்றும் அமைச்சரவை நியமிக்கப்பட வேண்டுமென கட்சித் தலைவர்கள் பலர் வலியுறுத்தியுள்ளனர். அதேபோல அரசியல் நெருக்கடி தீர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர்கள் சபாநாயகரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நாடாளுமன்ற அமர்வுகளுக்கு வரும் எம்.பிக்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டியதன் அவசியம் குறித்தும் இங்கு எடுத்துக் கூறப்பட்டது. எவ்வாறாயினும், இன்றையதினம் மற்றுமொரு கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்தி மேலும் பல விடயங்களை ஆராய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இன்றைய கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள் பின்னர் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படவுள்ளன.

## பிரதமராகிறார்...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருக்கும் இடையில் நேற்று (11) மாலை இடம்பெற்ற சந்திப்பைத் தொடர்ந்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியதையடுத்து, புதிய பிரதமராக பதவி ஏற்றுக்கொள்வதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும், அவர் அதனை ஏற்றுக்கொள்வதற்கு நிபந்தனைகளை விதித்துள்ளார். குறிப்பாக, ஜனாதிபதி பதவி விலக வேண்டும் எனக் கூறியுள்ளார்.

எனினும், தான் ஜனாதிபதி பதவியிலிருந்து விலக முடியாது. அவ்வாறு செய்தால் நாடு பாரிய நெருக்கடியை எதிர்நோக்க வேண்டிவரும் என்பதால், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

அதன்படி, நேற்று மாலை இடம்பெற்ற சந்திப்பைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் தமிழக் கட்சிகளின் ஆதரவுடன் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்து, புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

அதன்படி, இன்று அல்லது நாளை அவர் பதவி ஏற்கலாம் என்றும், அதனைத் தொடர்ந்து 15 பேர் கொண்ட புதிய அமைச்சரவையும் பதவி ஏற்கலாம் என்றும் நம்பகரமான வட்டார தகவல்கள் தெரிவித்தன.

ரணிலுக்கு எதிர்க்கட்சி எம்.பிக்கள் பலர் ஆதரவளிக்க முன்வந்துள்ளதாகவும் சொல்லப்பட்டது.

## தீர்வின்றேல்...

தீவைத்தல், கொலை செய்தல், சட்டத்தை கையில் எடுத்தல் போன்றவற்றிற்கு சட்டத்துக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படாத சூழ்நிலை காணப்படும் நாட்டில் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது.

நாங்கள் ஏற்கனவே நெருக்கடியான நிலையில் இருக்கும் போது, இவ்வாறான வன்முறைகள் இடம்பெறுமாயின், அது பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தாது என்பதோடு, சீர்குலைந்துள்ள பொருளாதாரத்தையும் கட்டியெழுப்பவும் முடியாது.

பொருளாதார நெருக்கடியை தீர்க்க வேண்டுமாயின் நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை மிக மிக அவசியமாகும். நான் ஆளுநர் பதவியை பொறுப்பேற்கும் போது, பிரச்சினையின் ஆரம்பமாக இருந்தது. இதனால், விரைவில் அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணப்பட்டு பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஏதேனும் ஒரு வழி கிடைக்கும் என எதிர்பார்த்தோம். ஆனால், தற்போது நாங்கள் பிரதமர், நிதி அமைச்சர் இல்லாத, நாடாளுமன்றத்திலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க முடியாத, நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஒருவர் மாத்திரம் இருக்கும் சீர்குலைந்துள்ள நாட்டில் இருக்கின்றோம்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி மற்றும் 225 மக்கள் பிரதிநிதிகளும் இணைந்து ஏதேனும் ஒருவகையில் தற்போதுள்ள நிலைமையை முடிவுக்குக்கொண்டுவர வேண்டும் என்பதுடன், சட்டம் மற்றும் ஒழுங்கை முறையாக பேணக்கூடிய ஸ்திரமான அரசாங்கத்தை உருவாக்க வேண்டும்.

அரசியலமைப்பு மற்றும் ஜனநாயகத்துக்கு அமைய காலம் தாழ்த்தப்படாதது வெகுவிரைவில் நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்பட வேண்டும். இல்லையேல், நாடும் அதலபாதாளத்துக்கு அல்லது அராஜகத்திற்குள் தள்ளப்படும் என்பதை மத்திய வங்கி என்ற ரீதியில் அறிவிக்க வேண்டும்.

நாட்டில் தந்போது 3 மணித்தியாலங்கள் மின்வெட்டு, குறிப்பிட்டளவாக எரிபொருள், குறிப்பிட்டளவான எரிவாயு இருப்பதுடன், தேவைக்கு ஏற்ற அத்தியாவசியப் பொருட்களும் நாட்டில் இருக்கின்றன. இந்த நிலையில், எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு தற்போதைய நிலைமை தொடருமாக இருந்தால் 10 – 12 மணி நேர மின்வெட்டு, அனைவருக்கும் எரிபொருள் இல்லாது போவதுடன், எரிவாயு வரிசைகளும் நீடிக்கும் நிலைமை ஏற்படும்.

அதேபோன்று, மக்களுக்கு வேறு வழியில்லாது வீதிக்கு இறங்கி போராட வேண்டிவரலாம். எனவே, அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கான பொறுப்பு மக்களால் தெரிவு செய்த பிரதிநிதிகளுக்கு இருக்கின்றன. வீழ்ச்சியடையும் நாட்டை மீள கட்டியெழுப்ப வேண்டுமாயின் எங்களுக்கு உடனடியான தீர்வுகள் வேண்டும். எங்களால் மாத்திரம் இவற்றை நிவர்த்தி செய்ய முடியாது.

தீர்வு காண்பதற்கான சூழல் நாட்டில் இல்லாத வரை பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கு நாங்கள் எடுக்கும் எந்தவொரு தீர்வும் வெற்றியளிக்காது. வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தில் கடந்த வாரத்தில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டது. ஆனால், தற்போது அவை சீர்குலைந்துள்ளதால் பொருளாதார நெருக்கடி மேலும் உக்கிரமடைகின்றன. எனவே, அரசியல் ஸ்திரத்தன்மை, பிரதமர் மற்றும் பொறுப்பான அரசாங்கத்தை உருவாக்க வேண்டும்.

நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை இல்லையேல் நான் அல்ல யார் வந்தாலும் நாட்டை கட்டியெழுப்ப முடியாது. எனவே, எதிர்வரும் இரு வாரங்களுக்கு அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி, நெருக்கடிக்கு தீர்வு காண தவறினால் நான் ஆளுநர் பதவியில் நீடிக்கமாட்டேன் என்பதை தெளிவாகக் கூறியுள்ளேன்.

யார் வந்தாலும் மத்திய வங்கியால் தனியாக இந்த நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது. அரசியல் மற்றும் சமூக ஸ்திரத்தன்மை அவசியம். எனவே, ஜனாதிபதி உள்ளிட்ட அனைத்து கட்சித் தலைவர்களுக்கும் என்னுடைய முடிவை தெளிவாகக் கூறியுள்ளேன் - என்றார்.

## சட்டவாட்சியை...

நாட்டில் அண்மைக்காலமாக இடம்பெற்ற மோதல் நிலைமைகளில் புலனாய்வுத்துறையினரின் குறைபாடுகள் காணப்படுவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

சட்டவாட்சியை பாதுகாக்கும் அனைத்து நிறுவனங்களும் மோதல் சூழ்நிலைகளில் ஒத்துழைப்பு வழங்கவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர், ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ரோஹினி மாரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இன்று ஆணைக்குழுவில் ஆஜரான பொலிஸ்மா அதிபர் மற்றும் இராணுவத் தளபதி ஆகியோர் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற மோதல்கள் குறித்தும் அதனை கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் தெளிவுபடுத்தியதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விசாரணைகளுக்கு அமைய, மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் நாளை மறுதினம் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

## மஹிந்தவின் பாதுகாப்பு...

அவரை நாங்கள் திருகோணமலை கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்றோம் என பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று (11) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் தலைவர் உள்ளிட்ட முன்னாள் தலைவர்கள் வரையான பிரஜைகளின் உயிரை பாதுகாப்பது எங்களுடைய கடமையாகும். அதன்படி, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இருந்து இடத்தை ஆயிரக்கணக்கானவர்கள் சுற்றிவளைத்திருந்தனர். அத்தோடு, தீ வைத்தும் அங்கு குழப்பத்தை ஏற்படுத்தினர். பின்னர் அதனை நாங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தோம்.

எனினும், அவர் அங்கு தொடர்ந்து இருப்பது அவருடைய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் என்பதை புரிந்துகொண்டமையால், அவரை திருகோணமலை கடற்படை முகாம் வரை நாங்கள் அழைத்துச்சென்றோம். அது நிரந்தரமானதல்ல. எதிர்வரும் சில நாட்களில் நாட்டின் நிலைமை தணிந்தவுடன், அவர் விரும்பும் இடத்துக்கு நாங்கள் அவரை அனுப்பி வைப்போம் - என்றார்.

## இராணுவ ஆட்சி...

***யோ.தர்மராஜ்***

“யாரும் அச்சமடைய வேண்டாம் நாட்டில் ஒருபோதும் இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்படாது என்பதை தான் பொறுப்புடன் கூறுகின்றேன். தற்போது கூறப்படும் கருத்துகள் அனைத்தும் முற்றிலும் போலியானவை” என பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று (11) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இராணுவ ஆட்சி உருவாகும் என்பது போலியான கருத்து. இதுவரை இலங்கையில் இராணுவ ஆட்சி என்ற ஒன்று உருவாகவில்லை.

1960ஆம் ஆண்டுகளில் ஒரு முயற்சி மாத்திரம் முன்னெடுக்கப்பட்டது. அக்காலப்பகுதியில் இராணுவத்தில் முதல் மூன்று இடங்களிலிருந்தவர்கள் ஒன்றுகூடி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, திட்டங்களும் வகுக்கப்பட்டிருந்தன. பின்னர், அவர்களில் யாரோ ஒருவர் வந்து நாட்டில் இராணுவ ஆட்சிக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக கூறிவிட்டார். எனவே, இலங்கை போன்ற நாடுகளில் இராணுவ ஆட்சியை ஏற்படுத்துவது என்பது மிக கடினமான ஒன்றாகும்.

எனவே, யாரும் அச்சமடைய வேண்டாம். நாட்டில் ஒருபோதும் இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்படாது. இதனை பொறுப்புடன் கூறுகின்றேன். இராணுவ ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என தற்போதுள்ள இராணுவ அதிகாரிகளிடம் எவ்வித சிந்தனையும் இல்லை. அவர்களுக்கு நாட்டின் அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணமும் இல்லை.

ஆகவே, இராணுவ ஆட்சி ஏற்படுத்துவதாகக் கூறப்படுவது போலியான கருத்தாகும். குறிப்பாக, நான் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவிக்கு வந்தவுடன், நாட்டில் இராணுவ ஆட்சியை ஏற்படுத்த முயற்சிப்பதாகக் கூறப்பட்டது. 30 வருடங்கள் இராணுவ உடை அணிந்த நான் நாட்டுக்காக சிறியளவான சேவையேனும் செய்துள்ளேன். நாட்டுக்காக சேவையாற்ற மீண்டும் அழைக்கப்பட்டால் அது எவ்வாறு தகுதியற்றதாக மாறும். எனவே, இராணுவ ஆட்சி என்பது முற்றிலும் போலியான கருத்தாகும்.

எனினும், நாட்டில் ஆபத்தான நிலைமை ஏற்படும் போது, அதனை கட்டுப்படுத்துவதற்கு இராணுவத்துக்கு அதிகாரமுள்ளது. அதனைக் கொண்டு நிலவரத்தை கட்டுப்படுத்தி நாட்டை அரசிடம் ஒப்படைப்போம். அதன் பின்னர், அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கும் - என்றார்.

## மெகசின் சிறைச்சாலையில்...

குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே முருகையா கோமகன் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல வருட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிப்பை உணர ஆரம்பித்துள்ளனர்.

புதிய மெகசின் சிறைச்சாலையில் ஒரு வகை வைரஸ் காய்ச்சல் பரவி வருகிறது. இதனால் தமிழ் அரசியல் கைதிகள் பலரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். வைத்தியம் பெறுவதற்கான மருந்துகள் கூட பெரும் தட்டுப்பாடாக உள்ளது. மேலும் தற்போது சாதாரணமான பனடோலைக் கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது. அரசியல் கைதிகளின் உறவினர்கள் இதனை எமக்கு தெரியப்படுத்தி கவலைப்பட்டனர். இது தொடர்பாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம், அரசாங்கம், சர்வதேச தொண்டு நிறுவனங்கள் கருத்திற்கொண்டு உதவி செய்ய முயற்சிக்க வேண்டும்.

அரசியல் கைதிகள் பலரும் தொற்றா நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தொடர்ச்சியாக இவ்வாறான நோய்களினாலும் மருத்துவ ரீதியாகவும் புறக்கணிக்கப்படுகின்ற நிலையும் காணப்படுகிறது.

சம்பந்தப்பட்ட தரப்புகள் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். நாட்டை சூறையாடி பொருளாதாரத்தை நலிவடையச் செய்த நபர்கள் தப்பியோடக்கூடிய சூழலில் சாதாரண குற்றம் செய்ததற்காக 10 தொடக்கம் 26 வருடங்கள் வரை தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் உள்ளனர். உடனடியாக அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றார்.

# கலவரத்தில் 40 வரையான பொதுப் போக்குவரத்து பஸ்கள் சேதம்







காலிமுகத்திடல் போராட்டக்களத்தில் இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் நாடு பூராகவும் இடம்பெற்ற கலவரங்களில் பொதுப் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படும் 40 வரையான பஸ்கள் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அந்த பஸ்களில் அதிகமானவை தீ வைக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பஸ் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த பஸ்களில் 30 வரையான பஸ்கள் தனியார் பஸ்கள் என்றும் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறு சேதப்படுத்தப்பட்ட பஸ்களில் அதிகமானவை கொழும்பு - 02, பெரஹரா மாவத்தை, பேரவாவி மற்றும் பித்தல சந்தி ஆகிய பிரதேசங்களில் இருப்பதாகவும், அந்தப் பிரதேசங்களில் 10 பஸ்கள் வரை சேதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது, பெரஹர மாவத்தை, பேரவாவியில் ஐந்து வரையாக பஸ்கள் வாவியில் மூழ்கியுள்ளதுடன், அவை மீளப் பயன்படுத்த முடியாதளவுக்கு சேதமடைந்துள்ளன.

கொழும்பு பொலிஸ் படைத் தலைமையகத்துக்கு அருகில் பம்பலப்பிட்டி, தும்முல்ல ஆகிய பிரதேசங்களிலும் சில தனியார் பஸ்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன.

அலரிமாளிகை கூட்டத்துக்கு மக்களை ஏற்றிவந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்களுக்கு மேலதிகமாக வீதியில் பயணித்துக்கொண்டிருந்த சில பஸ்களும் தாக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.







நாட்டில் இடம்பெற்ற கலவரத்தில் உயிர் நீத்தவர்களுக்காக 'கோட்டா கோ கம'வில் மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு.




நாட்டில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்த காலப்பகுதியிலும் 'கோட்டா கோ கம' போராட்டக்களத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (படங்கள் - ஏ.எஸ்.எம்.ஜாவித்)

## ஹட்டன் வீதிகளில் தேவையின்றி நடமாடுவோர் பொலிஸாரால் சோதனை







(மஸ்கெலியா நிருபர்)

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு காரணமாக ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதான நகரங்களில் நேற்று முதல் பொலிஸார் தீவிர சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். ஊரடங்கு சட்டத்தை மீறி வாகனங்களில் செல்லும் அனைத்து நபர்களும் வாகனங்களும் சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றன.

காரணமின்றி வீதியில் சுற்றித்திரியும் சந்தேகத்துக்குரியவர்களை கைது செய்து விசாரணைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த 9ஆம் திகதிமுதல் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எனவே, இதனை கருத்திற்கொண்டு தேவையின்றி வீதிகளில் சுற்றித் திரிய வேண்டாம் என ஹட்டன் பொலிஸ் நிலைய உயர் அதிகாரி மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை, ஊரடங்கு உத்தரவு காலத்திலும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தங்களது பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுக்கு எவ்வித தடையும் இன்றி வீதிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## காத்தான்குடி பொதுஜன பெரமுன கட்சி அலுவலகம் மீது தாக்குதல்







(மட்டக்களப்பு நிருபர்)

காத்தான்குடி பிரதேச பொதுஜன பெரமுன அலுவலகத்தின்மீது நேற்று (11) தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யபட்டுள்ளது.

காத்தான்குடி முகைதீன் பெரிய மெத்தைப் பள்ளிவாசலுக்கு முன்னால் அமைந்துள்ள இந்த அலுவலகம் இனந் தெரியாத நபர்களால் கல்வீச்சுத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதாக பொதுஜன பெரமுன காத்தான்குடி செயற்பாட்டாளர் எம்.எம்.நவா தெரிவித்தார்.

அலுவலகத் தாக்குதலின்போது அங்கு ஒட்டப்பட்டிருந்த முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் சுவரொட்டிகள் கிழித்து வீசப்பட்டிருந்தன. ஸ்தலத்திற்கு விரைந்த காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## புதைக்கப்பட்ட நிலையில் ஆணொருவரின் சடலம் மீட்பு



யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணி பகுதியில் ஆண் ஒருவரது சடலம் புதைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் மீட்கப்பட்ட குறித்த இடத்தை மருதங்கேணி பொலிஸார் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்திருந்த நிலையில் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் சடலம் புதைக்கப்பட்டுள்ள இடத்தை தோண்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இந்தக் கொலைச்சம்பவமானது குடும்பத் தகராறு காரணமாக இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் மருதங்கேணி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த இடத்திற்கு நேற்று(11) வருகை தந்த மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். குறித்த பகுதிக்கு வருகை தந்த நீதவான் நீதிமன்ற நீதிபதி இஸ்மயில் ஜெமில் தலைமையில் சடலம் தோண்டி எடுக்கப்பட்டது.

இதில் இராசன் சிவஞானம் எனும் இரண்டு பிள்ளைகளின் தந்தையின் சடலமே இவ்வாறு புதைக்கப்பட்டிருப்பது அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இதுதொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## மட்டு. காணாமல்போனோர் ஆணைக்குழு அலுவலகத்தால் இடம்பெறவிருந்த விசாரணைகள் தற்காலிகமாக இடைநிறுத்தம்

### அலுவலக ஆணையாளர் யோகராஜா தெரிவிப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணாமல்போனோர் ஆணைக்குழுவின் அலுவலகத்தினால் நேற்று 11ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதிவரை 6 பிரதேச செயலகப் பிரிவுகளில் இடம்பெறவிருந்த விசாரணைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக காணாமல்போனோர் ஆணைக்குழுவின் அலுவலகத்தின் ஆணையாளர் டி.யோகராஜா தெரிவித்துள்ளார். காணாமல்போனோர் ஆணைக்குழுவின் அலுவலகத்தின் ஆணையாளர் டி.யோகராஜா நேற்று முன்தினம் (10) இரவு ஊடகங்களுக்கு தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மண்முனை வடக்கு, செங்கலடி, கிரான், வாழைச்சேனை, வாகரை, வவுணதீவு ஆகிய 6 பிரதேச செயலகப் பிரிவுகளில் இருந்து காணாமல்போனோர் ஆட்கள் சம்பந்தமான அலுவலகத்திற்கு செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகள் 11,12,13,14 ஆகிய திகதிகளில் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்நிலையில், காணாமல்போனோர் ஆணைக்குழுவினர் மட்டக்களப்பிற்கு நேற்று முன்தினம் இரவு வருகை தந்துள்ளபோதும் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக இந்த விசாரணை நடவடிக்கை முன்னெடுக்க முடியாததையிட்டு, அதனை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதுடன், அந்த விசாரணைக்காக பிறிதொரு தினம் முடிவு செய்யப்பட்டு விசாரணைக்கு அழைக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் அறிவிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

## யாழுக்கான அத்தியாவசியப் பொருட்கள் விநியோகத்தில் எந்தத் தடையும் இல்லை

### மொத்த விற்பனையாளர்கள் தெரிவிப்பு

யாழ். மாவட்டத்திற்கான உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்தில் எந்தவிதப் பாதிப்பும் ஏற்படவில்லையென யாழ். மொத்த விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உணவு பொருள் விநியோகத்தில் ஒரு வாரம் தடங்கல் ஏற்படுமென யாழ். அரசாங்க அதிபர் வெளியிட்ட தகவல் தவறானது என்றும் இந்தத் தகவலால் பொதுமக்கள் பதற்றமடைய வேண்டாமென்றும் தெரிவித்துள்ளனர்.

ஊரடங்கு மற்றும் தென்னிலங்கை கொந்தளிப்பான நிலவரங்களினால் கொழும்பிலிருந்து யாழ். மாவட்டத்திற்கு பொருட்களை கொண்டு வருவதில் ஒரு வார தடங்கல் ஏற்படலாமென யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் நேற்றுமுன்தினம் எச்சரித்திருந்தார்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இதனால் பொதுமக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டதுடன் பொருட்களை கொள்வனவு செய்வதில் தீவிரம் காட்டினார்கள். எனினும், அரச அதிபரின் தகவல் தவறானது என்றும் பொருள் விநியோகம் சீராக நடந்து வருவதாகவும் மொத்த விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

"யாழ். மாவட்டத்திற்கான பொருள் விநியோகத்தில் ஒரு வார தடங்கல் ஏற்படுமென அரசாங்க அதிபர் எச்சரித்திருந்தார். இதனால் மக்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்கிறோம்.

எனினும், பொதுமக்கள் அச்சமடைய வேண்டியதில்லை. யாழ்ப்பாணத்திற்கான பொருள் விநியோகம் சீராக நடந்து வருகிறது. நேற்றும் நேற்று முன்தினமும் கொழும்பிலிருந்து பொருட்களை ஏற்றியபடி பாரவூர்திகள் யாழ்ப்பாணம் வந்துள்ளன. கொழும்பில் கொள்வனவு செய்யக்கூடிய அனைத்து பொருட்களும் சீராக யாழ்ப்பாணத்திற்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

நேற்று காலையில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த பாரவூர்திகள், 3 இடங்களில் போராட்டக்காரர்களால் வழிமறிக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திற்கான பொருள் விநியோகம் என்றதும் எந்தத் தடங்கலும் ஏற்படுத்தாமல் பயணத்தை தொடர வசதி செய்தனர்.

நிலைமை இப்படியிருக்க, பொருள் விநியோகம் ஒரு வாரம் பாதிக்கப்படுமென அரசாங்க அதிபர் தெரிவித்த கருத்து எமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தி பொருள் கொள்வனவிற்கு முண்டியடிப்பதை அவதானிக்கிறோம்.பொருள் விநியோகம் சீராக இடம்பெறுவதால் மக்கள் பதற்றமடைய வேண்டாம்" எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

## சாதாரண தரப் பரீட்சைகள் திட்டமிட்டப்படி இடம்பெறும்

கல்விப் பொது தராதர சாதாரணதரப் பரீட்சைகளை ஒத்திவைக்க எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அதன் அடிப்படையில், ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டது போன்று பரீட்சைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2021 ஆம் கல்வி ஆண்டுக்கான கல்விப் பொது தராதர சாதாரணதரப் பரீட்சைக்கான நேர அட்டவணை ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்த நிலையில், எதிர்வரும் 23ஆம் திகதி சாதாரண தரப் பரீட்சைகள் ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி நிறைவடையவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, மே 12ஆம் திகதி, வியாழக்கிழமை

# சிந்தித்துச் செயற்படுவோம்!

கொழும்பு, காலிமுகத்திடலிலும், அலரி மாளிகைக்கு முன்பாகவும் ஜனநாயகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போராட்டக்காரர்கள் மீது முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் தாக்குதல் மேற்கொண்டதையடுத்து, நாடு முழுவதும் வன்முறைகள் வெடித்தன.

அதன் தொடர்ச்சியாக நேற்றைய தினமும் பல்வேறு பகுதிகளில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த வன்முறைகள் காரணமாக ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வருகிறார். மேலும் ஒன்பது பேர் பலியாகியுள்ளதுடன், இருநூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

அத்துடன் முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், ஆளுங்கட்சி ஆதரவாளர்கள் ஆகியோரது வீடுகள், சொத்துகள் மற்றும் அரச உடைமைகள் சேதமாக்கப்பட்டுள்ளன. வாகனங்கள் பல எரியூட்டப்பட்டுள்ளன.

கோட்டா கோ கம, மைனா கோ கம ஆகியன தாக்கப்பட்ட மே 09ஆம் திகதி நாட்டு மக்கள் கொதித்தெழுந்தனர். அவர்கள் ஆவேசம் காரணமாக தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர். எனினும், தொடர்ந்து மறுநாளும் வன்முறைகள் தொடர்ந்தன. நேற்று முன்தினம் இரவு அரசியல்வாதிகள் மற்றும் ஆளுங்கட்சிக்கு ஆதரவானோருக்குச் சொந்தமான கட்டடங்கள் தீ வைக்கப்பட்டன.

இதனையடுத்து ஊரடங்குச் சட்டம் நீடிக்கப்பட்டதுடன், பொதுச்சொத்துகளை திருடுவோர், பாதிப்பை ஏற்படுத்துவோர் மற்றும் நபர்கள் மீது தாக்குதல் நடத்துவோர் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு முப்படையினருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

மஹிந்த ராஜபக்ஷவின் அதிகாரத் திமிர் மற்றும் பிற்போக்குத்தனமான சிந்தனை காரணமாக நாடு பற்றி எரிந்தது. இலங்கை வரலாற்றில் கறுப்பு நாளாக கடந்த மே 09 ஆம் திகதி பதிவானது.

திட்டமிட்ட வகையில் குண்டர்களை அலரி மாளிகைக்கு அழைத்துவந்து மதுபானங்களைக் கொடுத்து ஜனநாயகப் போராளிகள் மீது மிலேச்சத்தனமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாவதும், இரண்டாவதும், மூன்றாவதும் தாய்நாடே முக்கியத்துவமென வெறும் ஏமாற்று வார்த்தைகள் கூறிய மஹிந்த ராஜபக்ஷ முழு நாட்டுக்கும் தீ வைத்திருக்கிறார்.

காலிமுகத்திடலில் அப்பாவி இளைஞர், யுவதிகள் குண்டர்களால் தாக்கப்படும்போது நாட்டு மக்களின் கோபம் எல்லைமீறிப் போனது. ஆதலால் ஏற்பட்ட வன்முறைகளைக் கட்டுப்படுத்த முப்படையினருக்கும் முடியாமற்போனது.

எனினும், வன்முறைகள் தொடர்ச்சியாக இடம்பெறும் பட்சத்தில் அவை எதிர்மறையான விளைவுகளை நாட்டுக்கு ஏற்படுத்தும். நாடு ஏற்கனவே பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. மேலும், சுகாதார நெருக்கடியும் ஏற்பட்டிருக்கிறது. அரசியல் நெருக்கடி காரணமாக ஸ்திரமற்ற நிலை காணப்படுகிறது. இந்நிலையில், பாதுகாப்பு நெருக்கடி நிலைமை ஏற்படுமாக இருந்தால் அதன் விளைவுகள் மிகப் பாரதூரமாக அமையும் என்பதை நினைவிற்கொள்ள வேண்டும்.

நாட்டின் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாமல் இராணுவ ஆட்சிக்கு வழிகோலும் வகையில் அரசினால் திட்டமிட்ட வகையில் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுவதாக சில அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகள் குற்றம் சுமத்தியிருந்தன.

அவ்வாறு இராணுவ ஆட்சி அமைந்தாலோ அல்லது தற்போதைய வன்முறை நிலைமை நீடித்தாலோ இலங்கை மேலும் படுபாதாளத்துக்குத் தள்ளப்படும். ஏனெனில், நமது நாட்டின் நிலைவரத்தை சர்வதேச நாடுகளும், அமைப்புகளும் கழுகுப்பார்வை கொண்டு பார்த்துக்கொண்டிருக்கின்றன.

சர்வதேச ஆதரவில்லாமல் எமது நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்லவோ அல்லது பழைய நிலைமையை ஏற்படுத்தவோ முடியாது. ஆதலால் தூர நோக்கத்துடன் சிந்தித்து வன்முறைகளைத் தவிர்ப்பதே காலத்தின் தேவையாகும்.

அதனை விடுத்து அசம்பாவிதங்கள் ஏற்படும் வண்ணம் செயற்படும் பட்சத்தில் பாதுகாப்புத் தரப்பினர் தமது உச்சபட்ச அதிகாரத்தைப் பயன்படுத்தும் சூழல் உருவாகும். அவ்வாறெனின் வன்முறைகள் மேலும் பரவும் நிலைமை ஏற்படும்.

ஒருவேளை, ஆட்சியாளர்களுக்கு இதுதான் அவசியம் என்றால் இதனூடாகவே மக்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என அவர்கள் நினைப்பார்களாயின் அதற்கு ஜனநாயக ரீதியில் பதில் வழங்குவதே பொருத்தமானதாகும்.

ஏனென்றால், தற்போதைய ஆட்சியாளர்கள் மக்களை நேசிக்கும் தலைவர்கள் இல்லையென்பதை மே 09 சம்பவம் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

# முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை பாதுகாப்பதற்குப் பாடுபட்ட பாக்கீர் மாக்கார்



**தேசமான்ய அல்ஹாஜ் எம்.ஏ.பாக்கீர் மாக்காரின் 105ஆவது பிறந்த தினம் மே 12ஆம் திகதி இன்று இடம்பெறுகின்றது.**

இலங்கை அரசியல் சமூகப் பரப்பில் என்றும் நினைவுபடுத்தக் கூடிய ஒரு மகானாக பாக்கீர் மாக்கார் திகழ்கிறார். 1917 மே மாதம் 12ஆம் திகதி பேருவளை மருதானையில் வைத்தியப் பரம்பரையில் பிறந்த பாக்கீர் மாக்கார், 80 வருடங்கள் வாழ்ந்து, 1997 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 10ஆம் திகதி இவ்வுலகைப் பிரிந்தார். இலங்கைக்கு முதலில் முஸ்லிம்கள் காலடி வைத்த பேருவளையில் தனது அரசியல் சமூகப் பணியை ஆரம்பித்த மர்ஹூம் பாக்கீர் மாக்கார், களுத்துறை மாவட்டத்தின் பிரபல சட்டத்தரணியாகத் திகழ்ந்தார். இவரது சட்டத்தரணிப் பணி முன்மாதிரி மிக்கதாக அமைந்திருந்தது. இன, மத பேதமின்றி ஏழைகளுக்கு இலவசமாக நீதிமன்றங்களில் ஆஜராகி நீதியைப் பெற்றுக்கொடுத்தார். இவரது இந்தப் பணி இவருக்கு மாவட்ட மக்கள் மத்தியில் அபிமானத்தை வென்றெடுக்க உதவியது.

சட்டக்கல்லூரி மாணவராக இருக்கும் போதே 1947 இல் பேருவளை நகரசபையில் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிட்டார். அக்காலத்தில் பேருவளை பிரதேச அரசியலில் பணம் தலைவிரித்தாடியது. தனவந்தர்களுடன் மோதும் அளவுக்கு பாக்கீர் மாக்காருக்கு பணவசதி இருக்கவில்லை. அத்தேர்தலில் அவர் தோல்வியுற்றார். தோல்வியைக் கண்டு மனம் தளராத இளம் பாக்கீர் மாக்கார், 1950 இல் நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு இதுவரை பிரதேசத் தனவந்தர்களால் அலங்கரிக்கப்பட்ட நகரசபைத் தலைவர் பதவியை தனது வசம் ஆக்கிக் கொண்டார். பிரதேச சிங்கள, முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெற்று நகர சபையின் தலைவரான இளம் பாக்கீர் மாக்கார், பேருவளை நகர சபையூடாக இந்நகரத்தின் புரட்சிகரமான மாற்றங்களை அறிமுகப்படுத்தினார்.

உள்ளூராட்சி அரசியல் மூலம் அரசியலுக்குள் பிரவேசித்த பாக்கீர் மாக்கார், முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயக்கவினால் பேருவளைத் தொகுதிக்கு ஐ.தே.க. பிரதம அமைப்பாளராக நியமிக்கப்பட்டார். இத்தொகுதிக்கு முஸ்லிம் ஒருவர் அமைப்பாளராக நியமிக்கப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும். இதன்மூலம் களுத்துறை மாவட்டத்தில் பரந்து விரிந்து வாழும் முஸ்லிம்களுக்கு நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு வழி பிறந்தது. 1960ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்ட பாக்கீர் மாக்கார், அமோக வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினரானார். 1960 ஜூலை மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தோல்வியுற்ற அவர், 1965ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றார். 1970 தேர்தலில் தோல்வியுற்ற அவர், 1977 இல் போட்டியிட்டு இலங்கையிலேயே ஆகக் கூடுதலான பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். ஜே.ஆர்.ஜெயவர்தனவின் அரசில் சபாநாயகராகத் தெரிவானார். 1978ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பின் படி சபாநாயகராகத் தெரிவானார். புதிய யாப்பின்படி நாட்டின் மூன்றாவது பிரஜையாக சபாநாயகர் கருதப்பட்டார். இக்காலகட்டத்தில் பிரித்தானியாவின் இளவரசர் சார்ள்ஸின் திருமணம் நடைபெற்றது. ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவும் பிரதமர் ஆர்.பிரேமதாசவும் திருமண நிகழ்வில் கலந்துகொள்வதற்கு லண்டன் சென்றபோது இலங்கையின் பதில் ஜனாதிபதியாகப் பணிபுரியும் வாய்ப்பு பாக்கீர் மாக்காருக்குக் கிடைத்தது. இலங்கைக்கு பதில் ஜனாதிபதியாக பதவி வகிப்பதற்குக் கிடைத்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும். 1978ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி சபாநாயகராகத் தெரிவான மர்ஹூம் பாக்கீர் மாக்கார், சபாநாயகர் பதவிக்கு புது அர்த்தம் கொடுத்து செயற்பட்டார். நாடாளுமன்ற அமர்வு நாட்களில் மட்டும் சபாநாயகர் நாடாளுமன்றத்துக்கு செல்லும் சம்பிரதாயத்தை மாற்றி, சபாநாயகர் அலுவலகத்தை முழுநேர அலுவலகமாக மாற்றிச் செயற்பட்டார். நாடாளுமன்ற வரவு-செலவுகளை கணக்காய்வு அதிபதி மூலம் கணக்காய்வு செய்யும் முறையினை இவர் அறிமுகப்படுத்தினார். காலிமுகத்திடலில் இருந்த நாடாளுமன்றக் கட்டடம் ஸ்ரீ ஜயவர்தனபுரவுக்கு மாற்றப்பட்டது இவரது காலத்திலாகும். இற்றைக்கு 40 வருடங்களுக்கு முன் புதிய நாடாளுமன்றக் கட்டடம் இவரது தலைமையில் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவினால் திறந்து வைக்கப்பட்டது. இதன்படி தற்போதைய நாடாளுமன்றத்தின் முதலாவது சபாநாயகராகவும் இவரே பணிபுரிந்தார். அதேபோன்று, காலிமுகத்திடல் நாடாளுமன்றத்தின் கடைசி சபாநாயகராகவும் இவரது பெயர் வரலாற்றில் பதிவாகியுள்ளது. மாகாண சபை உருவாக்கப்பட்டபோது, அதன் ஆளுநர்களாக மூத்த அரசியல்வாதிகள் நியமிக்கப்பட்டனர். 1978 ஜூன் மாதம் 31ஆம் திகதி இவர் தென் மாகாணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். இலங்கையின் முதலாவது முஸ்லிம் ஆளுநராகவும் இவரது பெயர் வரலாற்றில் பதிவாகி உள்ளது.

மர்ஹூம் பாக்கீர் மாக்கார், இலங்கை முஸ்லிம்களின் அரசியல் சமூக எழுச்சிக்குப் பெரும் பங்காற்றியவராவார். குறிப்பாக, முஸ்லிம்களது அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாப்பதற்காக நிறைந்த பங்களிப்பினை அவர் செய்துள்ளார். நாட்டின் எல்லை நிர்ணய ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டபோது அகில இலங்கை முஸ்லிம் லீக் சார்பில் தோன்றி சாட்சியமளித்தார். காலாகாலம் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுக்களின் முஸ்லிம் தரப்புக் கோரிக்கைகளை முன்வைக்கும் பேச்சாளராகவே பாக்கீர் மாக்கார் பணிபுரிந்தார். களுத்துறை மாவட்டத்தில் முஸ்லிம்களுக்காக பேருவளைத் தொகுதி இவரது வேண்டுகோளின் பேரிலேயே உருவாக்கப்பட்டது. விகிதாசாரத் தேர்தல் முறை கொண்டு வரப்பட முன் பேருவளைத் தொகுதியில் இருந்து ஐ.தே.க. சார்பில் மர்ஹூம் பாக்கீர் மாக்காரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் மர்ஹூம் ஐ.ஏ.காதரும் மாறி மாறித் தெரிவானார்கள். மாவட்ட முஸ்லிம் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம்களது நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைப் பாதுகாப்பதில் இவர் தீவிர அக்கறை காட்டினார். இவர் ஒருமுறை இலங்கை முஸ்லிம்களுக்காக புறம்பான தேர்தல் தொகுதி முறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு பிரேரணை ஒன்றை முன்வைத்தார். அந்த அளவுக்கு முஸ்லிம் சமூகத்தின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைக் காப்பதற்கு அக்கறையோடு செயற்பட்டார்.

பிற்பட்ட காலத்திலும் அகில இலங்கை முஸ்லிம் லீக், முஸ்லிம்களது அரசியல் பெரும் ஸ்தாபனமாகச் செயற்பட்டது.

முஸ்லிம்களுக்கான அரசியல் கட்சிகள் உருவாகும் முன் அரசியல் உரிமைகளை வென்றெடுக்கின்ற அமைப்பாக இந்த அமைப்புத்தான் செயற்பட்டது. கலாநிதி ரீ.பி.ஜாயா, டொக்டர் எம்.சீ.எம்.கலீல் போன்ற தலைவர்களால் வழி நடத்தப்பட்ட இந்த இயக்கம் இலங்கை முஸ்லிம்கள் இன்று உரிமைகளை வென்றெடுத்த அமைப்பாகும். இந்த அமைப்பின் உப தலைவர்களில் ஒருவராக இருந்த பாக்கீர் மாக்கார், எதிர்காலத்தை உணர்ந்து அதன் இளைஞர் அமைப்பினை புறம்பான, சுதந்திரமான ஓர் அமைப்பாக செயற்படுத்த விரும்பினார்.

அதன்படி முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளுக்கு புதிய யாப்பொன்றைத் தயாரித்து அதனைத் தனியாக இயங்குவதற்கு நடவடிக்கை எடுத்தார். 1978 முதல் நாடளாவிய ரீதியில் முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளை உருவாக்கி, ஒரு பலம்பெறும் சக்திமிகு வாலிப அமைப்பாக உருவாக்கினார். சபாநாயகராக இருக்கும்போது முஸ்லிம் கிராமங்களுக்கு மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அவ்வப்பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாகவும், அரசு மூலமும் தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தார்.

இலங்கையில் ஆகக் கூடுதலான முஸ்லிம் கிராமங்களுக்கு விஜயம் செய்த அரசியல்வாதியாக இவர் திகழ்கிறார். இவர் வாலிப முன்னணி களின் சம்மேளனத்தின் தலைவராக இருக்கும்போது 600க்கும் மேற்பட்ட கிராமங்களில் முன்னணிகள் அமைக்கப்பட்டன. முஸ்லிம் இளைஞர்கள் இதன்மூலம் தேசிய நீரோட்டத்தில் இணைந்து செயற்படுவதற்கு ஊக்குவிக்கப் பட்டனர்.

எனது தந்தை முன்னாள் சபாநாயகருடன் நெருங்கிச் செயற்பட்டமை எனது பசுமையான நினைகளில் இன்றும் உள்ளது.

மக்கள் துன்பம், துயரங்களை எதிர்கொள்ளும்போது அவர்களைத் தேடிச் சென்று உதவுவது பாக்கீர் மாக்காரிடம் காணப்பட்ட ஒரு விசேட குணாம்சமாகும்.

கந்தளாய் குளத்தின் உடைப்பின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு, முஸ்லிம் லீக் வாலிப முன்னணி மூலம் பெருந்தொகையான பொருட்களைத் திரட்டி எடுத்து வந்து பகிர்ந்தளித்தமையை நான் சிறுவனாக இருக்கும்போதே கண்டுள்ளேன். சபாநாயகராக, ஆளுநராக, அமைச்சராக நிறைந்த பங்களிப்புச் செய்த ஒரு தலைவராக பாக்கீர் மாக்காரை நான் காண்கிறேன். அரசியலில் ஊழல் மோசடி பற்றிப் பேசுகின்ற இந்த யுகத்தில் பாக்கீர் மாக்கார், நேர்மையான, களங்கமற்ற ஒரு தலைவராக சகலராலும் இன்றும் மதிக்கப்படுகிறார்.

**இம்ரான் மஹ்ரூப்,**
**திருமலை மாவட்ட எம்.பி.**

## நக்கல் நமசிவாயம்

**மஹிந்த கொழும்பிலிருந்து போய் திருகோணமலையில பாதுகாப்பா இருக்கிறாரெண்டு பாதுகாப்பு செயலாளர் சொல்லுறாரேண்டா நாட்டில பாதுகாப்பு நிலைமை எப்படி இருக்குதெண்டு பாருங்கோவன்...!**




## இன்றைய நாளில்...

- 1881 – துனீசியா பிரான்ஸின் நேரடி ஆட்சியின் கீழ் வந்தது.
- 1941 – உலகின் முதலாவது நிரலொழுங்கு, தானியங்கிக் கணினியான Z3 அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1965 – சோவியத் ஒன்றியத்தின் லூனா 5 விண்கலம் சந்திரனில் மோதியது.
- 1978 – சாயிரில், கொல்வேசி நகரைத் தீவிரவாதிகள் கைப்பற்றினர்.
- 1981 – ஐரியக் குடியரசுப் படையைச் சேர்ந்த தன்னார்வலர் பிரான்சிஸ் இயூசு சிறையில் உண்ணாநோன்பிருந்து இறந்தார்.
- 2015 – நேபாளத்தில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 218 பேர் உயிரிழந்தனர்.

# அரசியல் உறுதிநிலையை ஏற்படுத்த தேசிய மக்கள் சக்தியின் முன்மொழிவுகள்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினால் இடைக்கால அரசின் பொறுப்பை ஆறு மாதங்களுக்கு ஏற்பதற்கு நாங்கள் தயார் என அறிவித்துள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, இதற்காக நாடாளுமன்றத்திலுள்ள கட்சிகளின் ஆதரவையும் கோரியுள்ளதாகவும் தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று (11) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது நிலவும் அரசியல் நெருக்கடியை முடிவுக்கு கொண்டுவந்து அரசியல் ஸ்திரத்தன்மையை உருவாக்க தேசிய மக்கள் சக்தி குறுகிய கால யோசனைகளை முன்வைத்துள்ளது.

தற்போதைய ஜனாதிபதி பதவியில் இருந்துகொண்டு முன்னெடுக்கும் எந்த நடவடிக்கையையும் நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தாது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்பதுடன், பிரதமர் பதவி விலகியுள்ளதால் சபாநாயகர் தற்காலிக பதில் ஜனாதிபதியாக செயற்படலாம்.

தற்போதைய அரசாங்கத்துக்கும் நாடாளுமன்றத்துக்கும் மக்கள் ஆணை இல்லாதமையினால் அரசாங்கத்தின் மீது மக்களின் நம்பிக்கை முற்றாக சீர்குலைந்துள்ளது. இதனால் நாடாளுமன்றத்தில் முன்னெடுக்கும் எந்தவொரு திட்டத்தையும் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதால் 6 மாதங்களுக்குள் மக்கள் ஆணையுடன் புதிய அரசு ஸ்தாபிக்கப்படல் வேண்டும். அதுவரை தற்காலிக அரசை அமைக்கலாம். அதற்காக இரு யோசனைகள் உள்ளன.

அதன்படி, தற்போதைய அரசியல் நெருக்கடி மற்றும் அராஜக நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து நாட்டை புதிய வழியில் அழைத்துச் செல்வதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ள தேசிய மக்கள் சக்தி தயாராக இருக்கின்றது.

எனவே, தேசிய மக்கள் சக்தி முதன்மை பொறுப்பை வகித்து நாடாளுமன்றத்தின் ஊடாக தற்காலிக இடைக்கால அரசொன்றை எந்தவிதமான தடையுமின்றி நியமித்துக்கொள்வதற்கான வாய்ப்பை தேசிய மக்கள் சக்திக்கு வழங்குதல் வேண்டும்.

அவ்வாறில்லாவிட்டால், குறுகிய காலப்பகுதிக்காக நாடாளுமன்றத்தில் இடைக்கால அரசொன்றை அமைப்பதற்கு நாங்கள் தயார். நாடாளுமன்றத்தில் எங்களுக்கு சிறிய ஆசனங்களே இருப்பதால் தேசிய மக்கள் சக்திக்கு ஏனைய கட்சிகள் ஆதரவு வழங்க வேண்டும். அவ்வாறாயின், தற்போதைய நெருக்கடிக்கு தீர்வை வழங்குவதற்கான அரசாங்கத்தை ஏற்றுக்கொள்வதற்கு நாங்கள் தயார்.

மேற்படி இரண்டு தீர்வுகளில் ஏதேனும் ஒருவழியில் நியமிக்கப்படுகின்ற தற்காலிகமான இடைக்கால அரசாங்கத்தினால் முக்கிய சில விடயங்களை நிறைவேற்றவேண்டும். அதன்படி, ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்துகின்ற மற்றும் தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலத்தை மட்டுப்படுத்துகின்ற அரசியலமைப்புக்கான 21ஆவது திருத்தத்தை உடனடியாக நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பித்து நிறைவேற்றிக்கொள்ள வேண்டும்.

தற்போது மக்கள் எதிர்நோக்கியுள்ள கடுமையான பொருளாதார அழுத்தங்களை குறைப்பதற்கான அத்தியாவசிய நிவாரணங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கான அரசியலமைப்புத் திருத்தமொன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றிக்கொள்ளல் வேண்டும். அதேபோன்று தற்காலிக அரசாங்கமொன்று அமைக்கப்பட்டு 06 மாத காலப்பகுதிக்குள் புதிய ஆட்சியொன்றை நிறுவுவதற்காக பொதுத் தேர்தலையும் தற்போதைய ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான அரசியலமைப்புத் திருத்தத்தையும் உள்ளடக்கியதாக மக்கள் கருத்துக் கணிப்பொன்றையும் நடத்த வேண்டும்.

மேலும், தற்காலிக அரசாங்கத்தின் பணிகள் உரிய வகையில் இடம்பெறுகின்றனவா என்பதை கண்காணிப்பதற்கான கண்காணிப்பு சபையொன்று நியமித்தல் வேண்டும். அது தற்போதைய மக்கள் போராட்டத்துடன் தொடர்புபட்டுள்ள தொழிற்சங்கப் பிரதிநிதிகளை உள்ளிட்ட போராட்டத்தின் பிரதிநிதிகள், சமயத் தலைவர்கள், பல்வேறு தொழில் அமைப்புகள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும். இது தொடர்பாக எதிர்க்கட்சிகளுடன் பேச்சு நடத்தவும் எதிர்பார்த்துள்ளோம் - என்றார்.

## 11.05.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 140 3503 | 156 7411 |
| கனேடியன் டொலர் | 168 770 | 180 806 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42 7372 | 45 05 6 |
| யூரோ | 274 7883 | 3 03 26 |
| ஜப்பான் யென் | 1 6805 | 1 7883 |
| சிங்கப்பூர் டொலர் | 151 4331 | 160 5074 |
| ஸ்ரேலிங் பவுன் | 337 7814 | 357 0516 |
| சுவிஸ் பிராங் | 254 1365 | 268 046 |
| ஐ.அ.டொலர் | 250 616 | 263 8856 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 856 3322 |
| குவைட் | குவைட் தினார் | 0,077 42 4 |
| ஓமான் | ஓமான் றியால் | 836 3052 |
| கட்டார் | கட்டார் றியால் | 88 72 2 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 86 1323 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 88 2 60 |

# சிங்கராஜ வனத்தில் அமைந்துள்ள ஆடம்பர ஹோட்டலுக்கு தீவைப்பு



(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

சிங்கராஜ வனத்தின் எல்லை பிரதேசத்தில் அமைந்துள்ள ஆடம்பர ஹோட்டல் ஒன்றுக்கு நேற்று முன்தினம் தீ வைக்கப்பட்டுள்ளது. ஹோட்டலின் பெரும் பகுதி எரிந்து நாசமாகியுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர்களால் இவ்வாறு ஹோட்டலுக்கு தீவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

எனினும், குறித்த ஹோட்டல் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷவுக்கு சொந்தமானதென பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

# ஊரடங்கால் முடங்கிய நுவரெலியா மக்களின் இயல்புவாழ்க்கை பாதிப்பு










(செ.திவாகரன்)

நாடு முழுவதும் நேற்றும் நேற்று முன்தினமும் ஊரடங்கு சட்டம் அமுலிலுள்ள நிலையில், மலையகத்தின் நுவரெலியா நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. பிரதான நகரங்களிலுள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளதோடு வீதிகளில் இராணுவத்தினரும் பொலிஸாரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நுவரெலியா, நானுஓயா பிரதான சந்திகளில் உள்ள வீதித் தடையில் ஊரடங்கு காலப்பகுதியில் செல்லும் வாகனங்களை பொலிஸார் சோதனை செய்தும் விசாரணை செய்தும் வருகின்ற அதேவேளை, அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

திடீரென அறிவிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு காரணமாக மரக்கறி வியாபாரிகள், பழக்கடை உரிமையாளர்கள், அன்றாடம் கூலி வேலை செய்வோர் என பல்வேறு தரப்பினரும் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.























நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அமைதியின்மை காரணமாக கொழும்பில் நேற்று (11) இராணுவத்தினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்தன. (படப்பிடிப்பு - லலித் பெரேரா, கிரிஷான் காரியவசம், எஷான் தஸநாயக்க)

# அமைதிப் போராட்டங்களை அன்றுதொட்டு இன்றுவரை வன்முறைகளாக மாற்றியவர்கள் ஆட்சியாளர்கள்தான்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீநேசன்

(மண்முனை நிருபர்)

அமைதிப் போராட்டத்தை இரத்தக்களமாக மாற்றுவதற்காக திட்டமிட்டு முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் சகாக்களுடன் கைத்தொலைபேசியில் செல்பி படம் எடுத்துவிட்டு இறக்குமதிசெய்யப்பட்ட காடையர்களை அனுப்பியுள்ளனர் - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறீநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பிலுள்ள அவரது அலுவலகத்தில் வைத்து நேற்று (11) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஒரு மாத காலமாக கொழும்பு காலிமுகத்திடலில் மக்கள் அமைதியான முறையில் ஜனநாயக வழியில் உள்நாட்டையும், சர்வதேசத்தையும் ஈர்க்கத்தக்க வகையில் போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டத்திற்கு பரவலாக மக்களின் ஆதரவு இருந்தது. மனித உரிமை அமைப்புகள், சட்டத்தரணிகள் சங்கம், அரச உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழகங்கள், சிவில் அமைப்புகள், மதத் தலைவர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், எதிர்க்கட்சி அரசியலாளர்கள் என்று பலரும் ஆதரவளித்தனர். இப்படியான போராட்டத்தை சர்வதேச தலைவர்களும், இராஜதந்திரிகளும் ஜனநாயக ரீதியான மக்களுக்கான உரிமை இதுவென்றனர்.

அப்படியிருக்க, பிற மாவட்டங்களிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட குண்டர்கள் அலரிமாளிகைக் கூட்டமொன்றில் கலந்துகொண்டிருந்தார்கள். அக்கூட்டத்தில் பிரதமர் மஹிந்த, முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் ஆகியோர் உரையாற்றியுள்ளனர்.

அதன்பின்னர் தான் அங்கு கலந்துகொண்டவர்கள் அலரிமாளிகைக்கு அண்மித்திருந்த மைனா கோ கம கூடாரங்களை அழித்ததோடு, ஆர்ப்பாட்டக்காரர்களையும் தாக்கியுள்ளனர். அதனையடுத்து காலிமுகத்திடலுக்கும் சென்று அங்கும் கூடாரங்களை எரித்ததோடு ஆர்ப்பாட்டக்காரர்களைத் தாக்கியுள்ளனர். அமைதியாக வன்முறையில்லாமல் 30 நாட்கள் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களை குண்டர்கள் ஒருசில மணிநேரங்களில் வன்முறைக் களங்களாக மாற்றினர்.

அதிரடியான அந்தத் தாக்குதலுக்கு எதிரடியை செய்வதற்காக அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்கள் சார்பாக ஆயிரக்கணக்கான மக்கள் ஈடுபட்டனர்.

அன்றுதொட்டு இன்றுவரை அமைதிவழிப் போராட்டங்களை வன்முறைகளாக மாற்றியவர்கள் சிங்கள ஆட்சியாளர்கள்தான் என்பதையும் இந்த இடத்தில் குறிப்பிட்டாக வேண்டும்.

நேற்றுக் காலை அறிந்த தகவலின்படி 9 பேர் உயிரிழந்துள்ளனர். அதில் பொலன்னறுவை நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோறளயும் அடங்குவார். மேலும் 250 பேர் காயமடைந்துள்ளனர். 88 வாகனங்கள்



சேதப்படுத்தப்பட்டுள்ளன. சுமார் 38 வாகனங்ள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. சுமார் 104 வீடுகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. அலரிமாளிகையில் உரையாற்றிய அப்போதைய பிரதமர் மஹிந்த, முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் ஆகியோரின் உரைகளின் பின்னரே இந்த வன்முறைகள் வெடித்துள்ளன.

இவர்கள் இந்த வன்முறையை திட்டமிட்டு நடத்தியுள்ளனர். முன்னாள் பிரதமர் மஹிந்தவின் சகாக்களுடன் கையடக்கத் தொலைபேசியில் செல்பி படம் எடுத்துவிட்டு இறக்குமதிசெய்யப்பட்ட காடையர்களை வன்முறையை ஏற்படுத்தும்படி அனுப்பியுள்ளனர்.

பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிடுவதுபோல் ஆட்சியைப் பிடிப்பதற்கும் ஆட்சியைத் தொடர்வதற்கும் வன்முறைகள் என்பது ஆட்சியாளர்களின் சூழ்ச்சியாக இருப்பதைக் காணமுடிகின்றது. நாடு, மக்கள் எக்கேடு கெட்டாலும் தமது வர்க்கம் அதிகார நாற்காலியில் தொடர்ந்தும் இருக்கவேண்டும் என்பதே இலங்கை ஆட்சியாளர்களின் ஒரே இலக்காகவுள்ளது.

பிலிப்பைன்ஸின் முன்னாள் பிரதமர் மார்கோஸ் தேர்தல் மோசடிகள் மூலமாக தொடர்ந்தும் அதிகார நாற்காலியில் இருந்தார். ஊழல் மோசடிகள் அவரது கைவந்த கலை.

இறுதியாக 10 இலட்சம் மக்கள் அவரது அதிகார மாளிகையைச் சுற்றிச் சூழ்ந்ததும் விசேட வானவூர்தி மூலமாக குடும்பத்துடன் அமெரிக்காவில் தஞ்சமடைந்தார். சர்வாதிகாரி இடிஅமின் உகண்டாவில் படுமோசமான அநாகரிகமான ஆட்சியைச் செய்தான். இறுதியில் உகண்டாவில் இருக்க முடியாத நிலையில் சவூதி அரேபியாவில் தஞ்சமாகி அங்கே இறந்தான். இவையெல்லாம் எமது ஆட்சியாளர்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

எதை விதைக்கிறோமோ அதனை அறுக்க வேண்டியே ஏற்படும். வன்முறைகளை விதைத்தால் அதற்கான விளைவும் வன்முறையான அறுவடையாகவே அமையும். லிபியத் தலைவர் கேர்ணல் கடாபி எப்படித் தண்டிக்கப்பட்டார் என்பது அண்மைய சரித்திரமாகும். அபதந்திரம் தனக்கந்திரம் என்பது அர்த்தமான பொருள் பொதிந்த கருத்தாகும்.

நடைபெற்ற சம்பவங்களை வைத்து பார்க்கும்போது அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்திய முதல் குற்றவாளி முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷதான் என்பது புலனாகின்றது எனத் தெரிவித்தார்.

# மழைக்காலங்களில் குளமாக மாறும் வீதிகள்

## பொலிவேரியன் பிரதேசவாசிகள் கவலை





(மாளிகைக்காடு நிருபர்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்ததன் பின்னர், கடந்த மஹிந்த அரசினால் நிர்மாணித்து கொடுக்கப்பட்ட சாய்ந்தமருது பொலிவேரியன் கிராம மக்கள் மூன்று ஜனாதிபதிகளை மூன்று நாடாளுமன்ற தேர்தல்களை சந்தித்தும் இதுவரை தம்முடைய குறைபாடுகள் நிவர்த்திசெய்யப்படவில்லை என ஏக்கம் தெரிவிக்கின்றனர்.

அங்குள்ள வீதிகள் பாவனைக்குதவாத நிலையில் உள்ளதையும், தரமற்ற அபிவிருத்திகள் மூலம் பாதைகள் உடைந்து காணப்படுவதையும் பல தடவைகள் அதிகாரிகள், அரசியல்வாதிகளுக்கு எடுத்துரைத்தும் எவ்வித பயனும் கிட்டவில்லை என்று தெரிவிக்கின்றனர். மழைக்காலங்களில் பாம்பு போன்ற நச்சு விலங்குகள் வீடுகளை நோக்கி படையெடுக்கும் நிலை உள்ளதாகவும் இரவில் போதியளவிலான வெளிச்சம் தரக்கூடிய மின்விளக்குகள் இல்லாமையால் பல்வேறு அசௌகரியங்களை அனுபவித்து வருவதாகவும், இந்தப் பிரதேசத்தின் பிரதான நுழைவாயிலாக உள்ள பாலம் கூட மிகப்பெரிய சேதத்தை அடைந்துள்ளதாகவும் மக்கள் குறை கூறுகின்றனர்.

வீதிகளில் குளம்போன்று நீர் தேங்கி நிற்பதால் பாதசாரிகளும், பாடசாலை மாணவர்களும் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருவதாகவும் அடிக்கல் நடப்பட்டு பல வருடங்கள் மற்றும் பல மாதங்கள் கடந்தும் வீதி அபிவிருத்திக்கு நடப்பட்ட எந்த அடிக்கற்களும் இன்னும் செயலுருவம் பெறவில்லை என்று தெரிவிக்கின்றனர்.

சாய்ந்தமருது பொலிவேரியன் கிராம மக்களின் நிலையறிந்து அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் வீதி அபிவிருத்தித் திட்டங்களில் இந்த வீதிகளை சீராக பாவனைக்கு உகந்தளவில் மாற்றித்தருமாறு அரசிடம் மக்கள் கோரிக்கை விடுப்பதுடன், கல்முனை மாநகர சபை பொதியளவிலான தெருவிளக்குகளை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றனர்.

# அம்பாறை வீதிகளில் ரயர்கள் எரிப்பு



(அம்பாறை நிருபர்)

நாடளாவிய ரீதியில் அரசாங்கத்திற்கு எதிராக பல தரப்பினர் மேற்கொண்டுள்ள எதிர்ப்புப் போராட்டங்கள் தொடர்ந்துள்ள நிலையில், ரயர்கள், மரக்குற்றிகள் என்பன முக்கிய சந்திகளில் போடப்பட்டு, இனந்தெரியாதோரால் நேற்று (11) அதிகாலை எரியூட்டப்பட்டுள்ளன.

எதிர்வரும் தினங்களில் நாட்டின் முக்கிய அரசியல் நிலைமை தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகவுள்ள நிலையில், அம்பாறை மாவட்டம், கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் ரயர்கள் போடப்பட்டு எரியூட்டப்பட்டுள்ளன.

அம்பாறை - கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாண்டிருப்பு தாளவட்டுவான் சந்தி, நற்பிட்டிமுனை சந்தி உள்ளிட்ட பகுதிகளில் இவ்வாறு ரயர்கள், மரக்குற்றிகள் உள்ளிட்டவை பிரதான பாதையில் போடப்பட்டு எரிக்கப்பட்டுள்ளன.

மேலும் சம்பவம் தொடர்பாக கல்முனை பொலிஸார் அவ்விடத்திற்கு வருகை தந்து எரியூட்டப்பட்ட ரயர்கள், மரக்குற்றிகளை அகற்றி விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன், அவசரகால சட்டம் மற்றும் ஊரடங்கு சட்டம் அமுலில் இருக்கின்ற நிலையில் அப்பகுதியினால் பயணம் செய்யும் மக்கள் பொலிஸாரின் சோதனைக்குட்படுவதை காணமுடிகின்றது.

# அக்கரைப்பற்று கடற்கரையை அண்டிய குடியிருப்பு பகுதிகளுக்குள் கடல்நீர் புகுந்ததால் மக்கள் சிரமம்





(அட்டாளைச்சேனை நிருபர்)

அக்கரைப்பற்று கடற்கரைப் பகுதியை அண்டிய மக்கள் குடியிருப்புப் பகுதிக்குள் நேற்று (11) அதிகாலைவேளை கடல் நீர் புகுந்தமையால் மக்கள் மத்தியில் சுனாமி அச்சம் ஏற்பட்டதுடன், அப்பகுதியில் பதற்ற நிலையும் ஏற்பட்டதென பொதுமக்கள் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று மீராநகர்ப் பிரதேசத்தில் வழமைக்கு மாறாக கடல் அலைகளின் தாக்கம் அதிகரித்து, கடல் நீர் கடற்கரையில் இருந்து சுமார் 100 மீற்றர் தூரத்திற்கு அப்பாலுள்ள நிலப்பகுதிக்குள்ளும் மக்கள் குடியிருப்புப் பிரதேசத்திற்குள்ளும் புகுந்தமையால் அப்பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டது. இந்நிலைமையைப் பார்வையிட பெருந்தொகையான பொதுமக்கள் அப்பிரதேசத்தினை நோக்கிப் படையெடுத்தனர். இச்சம்பவம் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் நிகழ்ந்ததாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

சுனாமி வதந்தி மக்கள் மத்தியில் கிளப்பப்பட்டு அக்கரைப்பற்று பிரதேச மக்கள் மத்தியில் பீதியுடனான நிலை தோன்றியதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. கடல் நீர் கடற்கரைப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட பிரதான காபட் வீதியினையும் தாண்டி நிலப்பரப்பில் புகுந்தமையினால் கடற்கரையில் தரத்து வைக்கப்பட்ட படகுகள், சிறியரக வள்ளங்கள் மற்றும் கடற்றொழில் உபகரணங்கள் போன்றன கடல் நீரில் அடித்துச் செல்லப்பட்டதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இச்செய்தி அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பகுதிகள் முழுவதும் பரவியமையினால் கடற்கரையை அண்டி வாழும் மக்களும் அச்சத்தில் முழு இரவையும் கழித்ததாகவும் தெரிவிக்கின்றனர்.

கடற்பகுதியிலிருந்து இவ்வாறு அலைகள் நிலப்பகுதிக்கு உட்புகுந்தமையால் கடலில் இருந்து பல்வேறு கடற் தாவரங்களும் குப்பை கூளங்களும் நிலத்தினை நோக்கி அள்ளுண்டு கரையோரமெங்கும் சிதறிக் காணப்படுகின்றன.

# ஏறாவூரில் நகைக்கடை உடைத்து திருட்டு





(மட்டக்களப்பு நிருபர்)

ஏறாவூர் 4ஆம் குறிச்சி பிரதான வீதியை அண்டி அமைந்துள்ள நகைக்கடை உடைத்துத் திருடப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஏறாவூர் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அதன் உரிமையாளர் ஆத்ம பரணீதரன் தெரிவித்தார்.

நேற்று (11) சம்பவ இடத்திற்கு சென்ற ஏறாவூர் பொலிஸாரும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரும் சோகோ பொலிஸாரும் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

உடனடியாக விசாரணை மேற்கொண்டதில் 2.5 கிராம் நகை திருட்டுப் போயிருப்பது தெரிய வந்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உறவினர் ஒருவர் மரணித்ததனால் இந்த நகைக்கடை கடந்த எட்டு நாட்களாக பூட்டப்பட்ட நிலையில் இருந்ததாகவும் எட்டு நாட்கள் கழிந்த நிலையில் வந்து கடையைத் திறந்தபோது, கடை பூட்டு உடைத்து திருடப்பட்டிருப்பது தெரியவந்ததாக கடை உரிமையாளர் மேலும் தெரிவித்தார்.

இந்த நகைக்கடைக்கு அருகிலுள்ள மற்றொரு நகைக்கடை கடந்த 2ஆம் திகதி பூட்டு உடைக்கப்பட்டு அங்கிருந்த ஏ.ரி.எம்.வங்கி அட்டை உட்பட இன்னும் சில பொருட்கள் திருடப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவங்கள் பற்றி ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# ஊரடங்கினால் கூலித் தொழிலாளர்கள் பாதிப்பு

(நற்பிட்டிமுனை நிருபர்)

அரசால் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவு காரணமாக கல்முனை பிராந்திய. அன்றாட கூலித்தொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

சாய்ந்தமருது ஓஸ்மன் வீதி, கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் வீதியில் தரித்துநிற்கும் ஐம்பதுக்கும் மேற்பட்ட இத்தொழிலாளர்கள் வீட்டுவேலை, விவசாய வேலை என பல்வேறு வேலைகளுக்கு அழைத்துச்செல்வது வழக்கமாகும்.

மேசன், ஓடாவி, மண்அள்ளுதல், கல் அடுக்குதல், தேங்காய் பறித்தல் என பல்வேறு வேலைகளுக்கும் அழைத்துச் செல்லப்படுவதால் தொழில்வழங்குனர் தொழிலாளரை தேடி அலையும் நிர்ப்பந்தமும் இல்லாதிருந்தது.

ஊரடங்கு சட்டம் முற்றாக நீக்கப்பட்டு மக்களின் இயல்பு வாழ்வு ஏற்பட்டால் மாத்திரமே எமது வாழ்வாதாரப் பிரச்சினைகள் தீருமெனவும் அன்றாட கூலித் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

# கிழக்கில் வெள்ளரி செய்கையாளர்கள் பாதிப்பு





(பாண்டிருப்பு நிருபர்)

மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களின் கோடைகால தாகம் தணிக்கும் பழமான வெள்ளரிப்பழச் செய்கையில் ஈடுபட்டுவரும் தோட்டச் செய்கையாளர்கள் கடந்த மூன்று தினங்களாக நாட்டில் ஏற்பட்டுவரும் அசாதரண சூழ்நிலை காரணமாக பெரும் நட்டங்களுக்கு முகங்கொடுத்துள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது கிழக்கில் கடும் வெப்பம் நிலவிவரும் நிலையில், இங்குள்ள பிரதான வீதிகளின் ஓரங்களில் தாகம் தீர்க்கும் கோடைகாலப் பழமான வெள்ளரிப்பழம் அமோகமாக விற்பனை செய்யப்பட்டு வந்தது. இங்குள்ள விவசாயிகளும் வெயில் காலத்தை நம்பியே வெள்ளரிப்பழச் செய்கையினையும் செய்துவருகின்றனர். தினமும் தோட்டத்தில் வெள்ளரிப்பழங்கள் பழுத்து வருவதினால் அவற்றை உடனே பறித்து வியாபாரிகளுக்கு கொடுத்து விற்பனை செய்துவந்தனர்.

இந்நிலையில், தற்போது கடந்த மூன்று தினங்களாக நாட்டில் நிலவிய அரசியல் அசாதாரண நிலைமை காரணமாக பயரிடப்பட்ட வெள்ளரிப்பழங்கள் அனைத்தும் தோட்டங்களில் வெடித்துச் சிதறி, அழுகிய நிலையில் காட்சியளிக்கின்றன. இதனால் வெள்ளரிப்பழச் செய்கையாளர்கள் பெரும் நட்டங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். தூர இடங்களிலிருந்து வருகை தரும் வியாபாரிகள் கூட ஊடரங்கு சட்டம் காரணமாக வருகை தரமுடியாதுள்ளனர். கடந்த மூன்று தினங்களில் மட்டும் தோட்டங்களில் வெள்ளரிப்பழங்கள் வெடித்து நாசமாகியுள்ளன.

இந்நிலையில், பாதிக்கப்பட்டுள்ள தங்களுக்கு விவசாயத் திணைக்களம் மானிய அடிப்படையிலாவது உதவிகளை வழங்க முன்வர வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.







ஊரடங்கு சட்டம் காரணமாக கல்முனை மாநகரக் கடைகள், இஸ்லாமாத் பிரதேச வீதிகளில் திண்மக்கழிவு அகற்றப்படாத நிலையில் காணப்படுவதை படத்தில் காணலாம். (படங்கள் - நற்பிட்டிமுனை நிருபர்)

# ஹாபீஸ் நஸீர் அஹமட்டின் காரியாலயம், வீடு கடைகள் ஆர்ப்பாட்டக்காரர்களால் தீ வைப்பு

**3 ஆடைத்தொழிற்சாலைகளும் அடித்து உடைப்பு**







(கனகராசா சரவணன்)

முன்னாள் கிழக்கு மாகாண சபை முதலமைச்சரும் இராஜாங்க அமைச்சருமான ஹாபீஸ் நஸீர் அஹமட்டின் ஏறாவூர் பிரதான வீதியிலுள்ள காரியாலயம், வீடு, அவரது உறவினரின் வீடு, ஹோட்டல் மற்றும் கடை என்பன நேற்று முன்தினம் (10) இரவு தீக்கிரையாக்கப்பட்டதுடன், அவரின் 3 ஆடைத்தொழிற்சாலையை முற்றுகையிட்டு சேதமாக்கியதையடுத்து பொலிஸார் தாக்குதலை மேற்கொண்டோர் மீது கண்ணீர்ப் புகைக்குண்டு தாக்குதலை நடத்தி கலைத்தனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்துவந்துள்ள ஹாபீஸ் நஸீர் அஹமட் மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு மாறி இராஜாங்க அமைச்சர் பதவியை பெற்றுக்கொண்டார். இந்நிலையில், சம்பவதினமான நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு ஏறாவூர் பிரதான வீதியிலுள்ள ஹாபீஸ் நஸீர் அஹமட்டின் காரியாலயத்துக்கு முன்னால் ஒன்றுதிரண்ட பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், அவரின் காரியாலயம் மற்றும் வீட்டை உடைத்து தீயிட்டனர். இதனைத் தொடர்ந்து காரியாலயத்துக்கு அருகில் அவரது உறவினர்களது வீடு ஒன்று, ஹோட்டல் மற்றும் கடை ஆகியவற்றை அடித்து நொறுக்கப்பட்டு தீ வைத்தனர்.

இதன்பின்னர் ஏறாவூர் பகுதியில் அமைந்துள்ள அவரது 3 ஆடைத் தொழிற்சாலைகளுக்குள் முற்று கையிட்டு அடித்து நொறுக்கி சேதப்படுத்தினர். அதனைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் அமைந்துள்ள மொட்டு கட்சியின் காரியாலய கட்டடம் மீது தாக்குதலை மேற்கொண்ட பின்னர் எரிபொருள் நிலையம் ஒன்றின் முன்னால் வீதியில் ரயர் போட்டு தீயிட்டதையடுத்து, அங்கு சென்ற பொலிஸார் அவர்களை வன்முறையில் ஈடுபடவேண்டாம் என தெரிவித்தபோது பொலிஸார் மீது தாக்குதலை மேற்கொண்ட தையடுத்து அங்கு பதற்றநிலை ஏற்பட்டது.

இதனையடுத்து வன்முறைகளில் ஈடுபட்டோர் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகைக்குண்டு தாக்குதலை நடத்தி அவர்களை கலைத்தனர். இந்நிலையில், இராணுவத்தினரும் வரவழைக்கப் பட்டு தாக்குதலை மேற்கொண்டோரை அடித்து கலைத்ததுடன், இராணுவத்தினர் குவிக்கப் பட்டு முக்கிய சந்திகளில் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட் டுள்ளது. இதேவேளை, மட்டக்களப்பு மென்ரசா வீதியில் அமைந்துள்ள இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் வீட்டை நேற்று இரவு 7 மணிக்கு முற்றுகையிட்ட இளைஞர்கள் அந்தப் பகுதியிலுள்ள சந்திகளில் ஒன்றுகூடியிருந்ததையடுத்து, அவரின் வீட்டை சுற்றி பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அங்கு மேலதிக பாதுகாப்பிற்கு இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டதையடுத்து, அங்கு கூடியிருந்த இளைஞர்கள் அங்கிருந்து கலைந்து சென்றமை குறிப்பிடத்தக்கது.

# மண்டூரில் வயல்வெளியிலிருந்து ஆசிரியரொருவர் சடலமாக மீட்பு

(மண்முனை நிருபர்)



மட்டக்களப்பு, வெல்லாவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மண்டூர் பிரதேசத்திலுள்ள வயல் வெளியிலிருந்து ஆசிரியர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை (10) சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மண்டூர் பிரதேசத்தைச் சேர்நத 48 வயதுடைய பூபாலபிள்ளை சசிகரன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவ தினத்தன்று பாடசாலை விடுமுறை என்பதால் தனது மதியபோசன உணவை உண்டுவிட்டு, தனது வயலை பார்வையிடுவதற்காக சென்றவர் நேரமாகியும் வீடு திரும்பாத நிலையில், அவர் வயல் பிரதேசத்தில் மரணமடைந்த நிலையில் காணப்பட்டதை அவதானித்த நபரொருவர், அவரின் வீட்டாருக்கு சம்பவத்தை தெரிவித்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிக்குடி நீதிமன்ற நீதிவானின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்டதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்ல உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சாய்ந்தமருது துர்நாற்றம் வீசுவதற்கான காரணம் இரவில் களவிஜயம் மேற்கொண்டு கண்டுபிடிப்பு




(மாளிகைக்காடு நிருபர்)

சாய்ந்தமருது பிரதேசத்தின் ஒரு பகுதியில் கடந்த சில வாரங்கள் முதல் பிந்திய மாலை பொழுதுகளில் பலத்த துர்நாற்றமொன்று வெளிவந்துகொண்டிருப்பதனால் மக்கள் உச்சகட்ட அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர். இதனடிப்படையில் சுகாதார துறையினருக்கும், சாய்ந்தமருது பொலிஸாருக்கும் கிடைத்த மக்களின் முறைப்பாட்டையடுத்து பகல் வேளைகளில் பல்வேறு சந்தர்ப்பங்களில் களவிஜயம் மேற்கொள்ளப்பட்டு மக்களினால் குற்றங்சாட்டப்பட்ட விலங்கறுமனை உட்பட அதன் சுற்றாடல் பகுதி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

கல்முனை மாநகர சுகாதாரப் பிரிவினர், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், சாய்ந்தமருது பொலிஸார், ஊடகவியலாளர்கள், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினர் உட்பட பலரும் திடீரென மேற்கொண்ட களவிஜயத்தில் விலங்கறுமனையில் துர்நாற்றம் வீசுவதற்கான வாய்ப்புகள் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டதுடன், துர்நாற்றத்திற்கான சரியான காரணத்தை அடையாளங்காண முடியாமல் இருந்தது. நேற்று முன்தினம் மாலை வழமைபோன்று திடீரென எழுந்த துர்நாற்றத்தினால் மக்கள் மத்தியில் பலத்த சங்கடம் நிலவியது. அதனடிப்படையில் உண்மைக் காரணத்தைக் கண்டறிய மின்சாரம் தடைப்பட்டிருந்த நேரம் என்று கூட கவனத்திற்கொள்ளாது களவிஜயம் செய்த கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம்.அர்ஸத் காரியப்பர் மிக நீண்டநேரமாக விலங்கறுமனை உட்பட அதன் சுற்றாடல் பகுதியை கடுமையான சோதனைக்கு உட்படுத்தியிருந்தும் அங்கிருந்து துர்நாற்றம் வருவதற்கான எவ்வித காரணிகளையும் கண்டறிய முடியவில்லை.

கல்முனையை நோக்கிச் செல்லும் வண்ட் வீதியில் மேற்கொண்ட பரிசோதனையில் விலங்கு கழிவுகள், கோழி கழிவுகள் உட்பட பல்வேறு திண்மக்கழிவுகள் இடப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்ததுடன், குறித்த துர்நாற்றம் தொடர்பில் பிரதேசவாசிகளுடன் உரையாடிய கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம்.அர்ஸத் காரியப்பர், அடைக்கப்பட்டுள்ள நீர்நிலையில் நான்கு மாடுகள் இறந்துள்ளதாக பிரதேசவாசிகள் மூலமாக அறிந்து கொண்டதாகவும், இந்த விடயங்கள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுத்து மக்களின் சுகாதாரத்தை உறுதிப்படுத்த தானும் கல்முனை மாநகர சுகாதாரப் பிரிவும் எப்போதும் தயாராக இருப்பதாகவும், மாநகர வளப்பற்றாக்குறை காரணமாக இந்த செயற்பாடு எவ்வளவு தூரம் வெற்றியளிக்கும் என்பது தொடர்பில் தமக்கு தெரியாது என்றும் கள விஜயத்தின் பின்னர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

# மருதமுனை கடற்கரையில் நீராடச்சென்ற உயர்தர மாணவர்கள் இருவர் மாயம்

## தேடும் பணிகள் தீவிரம்



(பெரியநீலாவணை, அம்பாறை நிருபர்கள்)

அம்பாறை மாவட்டத்தின் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனை கடற்கரையில் நேற்று முன்தினம் மாலை (10) நண்பர்கள் இருவருடன் சேர்ந்து 4 இளைஞர்கள் குளித்துக்கொண்டிருந்த நிலையில், இரு இளைஞர்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டதாக சம்பவத்தை நேரடியாக பார்த்துக்கொண்டிருந்த இளைஞர்கள் தெரிவித்தனர். கடல் அலையில் இவர்கள் சிக்குண்ட காட்சியை கையடக்கத் தொலைபேசியில் பதிவுசெய்திருந்தனர்.

இதனையடுத்து பொதுமக்கள் குறித்த இளைஞர்களை காப்பாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் இரு இளைஞர் களையும் காப்பாற்ற முடியவில்லை. கடல் நீரில் குளித்த மற்றைய இரு இளைஞர்களில் ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கைகளில் பொதுமக்கள் ஈடுபட்டு வருகின்றனர். நேற்றுக் காலை (11) குறித்த பகுதிக்கு கடற்படையினர் வருகைதந்து தேடுதல் முயற்சிகளில் ஈடுபட்டனர். எனினும், இதுவரை காணாமல்போன இளைஞர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை.

தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த கடற்கரைப்பகுதியில் அதிகளவிலான பொதுமக்கள் ஒன்றுகூடியுள்ளனர். தற்போது மருதமுனை பிரதேசம் சோகத்தில் ஆழ்ந்துள்ளதையும் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறு காணாமல்போயுள்ள, பயறூஸ் யஸீத், உபைதுல்லாஹ் அதீப் என்ற இரு இளைஞர்களும் உயர்தரப் பிரிவில் முதலாம் வருடத்தில் கல்வி கற்கும் 17 வயது நிரம்பிய மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு காணாமல்போன இருவரில் பயறூஸ் யஸீத் என்பவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் .

சம்பவம் தொடர்பில் பெரியநீலாவணை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ராஜபக்ஷ கூட்டிலிருந்து விலகிவிட்டோம்

**ஐக்கிய காங்கிரஸ் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவிப்பு**



(மாளிகைக்காடு நிருபர்)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசால் முஸ்லிம் சமூகமோ எமது கட்சியோ எந்த நன்மையும் அடையவில்லை என்பதுடன், நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதில் அக்கட்சி பாரிய தவறுகளை செய்துவிட்டதால், 2019ஆம் ஆண்டுமுதல் எமது கட்சி பொதுஜன பெரமுனவுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திலிருந்து வெளியேறி சுயாதீனமாக செயற்படும் என்பதை மீண்டும் நாட்டு மக்களுக்கு ஐக்கிய காங்கிரஸ் கட்சி (உலமா கட்சி) அறிவித்துக்கொள்கிறது - என அக்கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மஹிந்த ராஜபக்ஷ நீண்டகால அரசியல் அனுபவம் உள்ளவராக இருந்தபோதும் தனது அருகில் கள்வர்களையும், கொள்ளையர் களையும் வைத்துக்கொண்டிருந்ததால் நாடு அதலபாதாளத்தில் விழுந்துவிட்டது. கடந்த நல்லாட்சி என்பது முஸ்லிம்களின் 99வீத வாக்குகளால் வந்தும் முஸ்லிம் சமூகத்துக்கு அநியாயமே செய்தது. இந்நிலையில், மஹிந்த தலைமை யிலான பெரமுனவுடன் இணையும்படி எமக்கு வந்த அழைப்பை ஏற்று நாம் இணைந்தோம்.

ஆனாலும் ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து நாம் முற்றாக கைவிடப்பட்டோம். பெரமுனவில் ஒட்டியிருந்த கள்ள முஸ்லிம் தரப்புக்கே முன்னுரிமை கொடுத்தனர். 2019இற்கு பின் இன்றுவரை பெசில் ராஜபக்ஷ எம்மோடு எந்த சந்திப்பையும் மேற்கொள்ளவில்லை என்பதுடன், நாம் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஓர் அம்சம் கூட நிறைவேற்றப்படவில்லை. அதுமட்டுமன்றி, முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள், நாட்டின் பிரச்சினைகள் பற்றி பல கடிதங்கள் அனுப்பினோம். அவை உதாசீனம் செய்யப்பட்டதோடு நாட்டை கொள்ளையடிப்பதிலேயே ஈடுபட்டார்கள்.

ஆனாலும் நாம் பொறுமை காத்தோம். எடுத்தோம் கவிழ்த்தோம் என முடிவெடுத்து தொப்பி பிரட்டி என்ற அவப்பெயர் நம் சமூகத்துக்கு வந்துவிடக்கூடாது என்பதை கருத்திற்கொண்டு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்திருந்தோம். இப்போது முழு நாடும் இவர்களைப்பற்றி தெரிந்திருப்பதால் சரியான நேரத்தில் சரியான முடிவை எடுத்து ராஜபக்ஷ கூட்டிலிருந்து விலகி விட்டோம் - என்று தெரிவித்துள்ளார்.

# போடியார் புலம்பல்!



அப்பா நாட்டை விட்டு ஓடவில்லை என அன்பு மகன் நாமல் சொல்லித்தாரு. ஓண்டா மகனே சொந்த நாட்டுக்குளே கொப்பரு, சித்தப்பாமார், கொம்மை, சித்தி, குஞ்சாத்தைமாரும் நடமாடமுடியாமல் போய்த்து எலுவா..

இப்படித்தாண்டா 2009இல் நாங்களும் நிம்மதியாக இருக்க உடாம கொப்பரும் சித்தப்பாவும் குண்டு போட்டு எங்கள கொண்டு குவித்தவங்க..

அந்த பாவம்தாண்டா தம்பி இப்ப உங்கட குடும்பத்த பாடப்படுத்துது புரிஞ்சயண்டா சரிடா தம்பி!

# அக்கரைப்பற்று பிரதேசத்தில் பொலிஸ் ரோந்து நடவடிக்கைகள் தீவிரம்



(ஆலையடிவேம்பு நிருபர்)

நாடளாவிய ரீதியில் பொலிஸ் ஊரடங்கு சட்டம் நீடிக்கப்பட்டுள்ள நிலையில் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் பாதுகாப்புத் தரப்பினர் தமது ரோந்து நடவடிக்கை மற்றும் சோதனை நடவடிக்கையை தீவிரப்படுத்தியுள்ளனர்.

அக்கரைப்பற்று மத்திய மணிக்கூட்டுக்கோபுர பகுதியில் நேற்று பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

தேவையற்ற விதத்தில் நடமாடியவர்களை எச்சரிக்கை செய்ததுடன், மோட்டார்சைக்கிள், ஆட்டோ உள்ளிட்ட வாகனங்களையும் திருப்பி அனுப்பியதை காணமுடிந்தது.

இதேநேரம், ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று பிரதேசங்களிலும் பாடசாலைகள், அரச அரசார்பற்ற நிறுவனங்கள், வங்கிகள், வியாபார நிலையங்கள் என்பன மூடப்பட்டிருந்ததுடன் வீதிகளும் வெறிச்சோடிக் காணப்பட்டன.

ஆயினும் மோட்டார்சைக்கிள் உள்ளிட்ட சிறிய வாகனங்களின் நடமாட்டம் உள்ளக வீதிகளில் காணப்பட்டது. இந்நிலையில் நேற்று திறக்கப்பட்டிருந்த ஒருசில வர்த்தக நிலையங்கள் பொலிஸாரின் தலையீட்டை அடித்து மூடப்பட்டன.

காலிமுகத்திடல் சம்பவத்தையடுத்து நாட்டின் பல பாகங்களில் ஏற்பட்டுவரும் அசம்பாவிதங்கள் போன்று அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் இடம்பெறாதவகையில் இருப்பதற்கான சகல ஏற்பாடுகளும் பாதுகாப்புத் தரப்பினரால் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று முன்தினம் ரயர்கள் எரிக்கப்பட்டபோதும் அசம்பாவிதங்கள் எதுவும் இதுவரை இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி பதவி விலகும் வரை எமது போராட்டம் தொடரும்!

## இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

(கல்லடி நிருபர்)

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் மறு அறிவித்தல் வரும் வரையில் கடமைக்குச் சமுகமளிக்க மாட்டார்கள் என்பதுடன், இன்றைய அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு பெற்றோர்கள் தங்களது பிள்ளைகள் குறித்து சமயோசிதமாகச் செயற்படுமாறும் கேட்டுக் கொள்கின்றோம் என இலங்கை ஆசிரியர் சங்க உபதலைவர் ஆ.தீபன்திலீசன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

காலிமுகத்திடலில் இளைஞர்களால் தன்னிச்சையாக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டு, இதன் மூலமாக முழுமையான இராணுவ ஆட்சியை உருவாக்கும் நோக்கிலேயே கோட்டாபய அரசாங்கம் செயற்பட்டு வருவது கண்கூடு.

ලංකා ගුරු සංගමය
இலங்கை ஆசிரியர் சங்கம்
CEYLON TEACHERS' UNION

தமது ஆட்சிக்கான அதிகார போதையில் சிங்கள மக்களுக்குப் பொய்களைக் கூறிய ஆட்சியாளர்கள், தமிழினத்தை இனஅழிப்புச் செய்தது போல் இன்று தமது சொந்த இனத்தின் போராட்டங்களை ஒடுக்க வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றனர்.

கட்டுமீறிய இன்றைய சூழலில் இந்தக் கொலைக்கார, ஊழல் அடக்குமுறை ஆட்சியாளர்கள் மக்கள் மட்டத்திலிருந்து அகற்றப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

இந்நிலையில், ஜனாதிபதி கோட்டாபய உள்ளிட்ட அரசாங்கம் அகற்றப்படும் வரை எமது தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படும்.

இதன்படி அனைத்து ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் மே 10ஆம் திகதி முதல் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளோம் என்பதையும், பணிப் பகிஷ்கரிப்பின்போது விடுமுறை தொடர்பாக விண்ணப்பிக்கவோ அல்லது விடுப்பு குறித்து அறிவிக்கவோ தேவையில்லை என்பதையும் அறியத் தருகிறோம்.

எனவே மறுஅறிவித்தல் வரும் வரை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் கடமைக்கு வரமாட்டார்கள் என்பதுடன், இன்றைய அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு, பெற்றோர்கள் தங்களது பிள்ளைகள் குறித்து சமயோசிதமாகச் செயற்படுமாறும் கேட்டுக் கொள்கின்றோம் எனவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீனத் தூதுவருக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்குமிடையில் விசேட சந்திப்பு





இலங்கைக்கான சீனத் தூதுவர் கி சென்ஹொன் (Qi Zhenhon) மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர்களுக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று (11) காலை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது இலங்கை தற்போது எதிர்கொள்ளும் நிலைமை தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டதோடு, இந்தப் பேரழிவு தருணத்தில் இலங்கைக்கு சகோதரத்துவத்தின் பிரகாரம், உதவிக்கரம் நீட்ட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சீனத் தூதுவரிடம் கோரிக்கை விடுத்தார்.

வெளிப்படைத்தன்மையுடன் நாட்டை ஆட்சி செய்தல், இலஞ்சம், ஊழல் மற்றும் அடக்குமுறைகள் ஒழிப்பு என்பனவே தனது நிர்வாகத்தில் முதன்மையான அம்சமாக இருக்கும் என எதிர்க்கட்சித் தலைவர் இதன் போது தெரிவித்தார்.

இலங்கையை தற்போதைய நிலையில் இருந்து மீட்கும் முகமாக சீனாவின் பெருந்தன்மையான ஆதரவு மிகவும் அவசியமானது என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இது தொடர்பில் தலையிடுமாறும் தூதுவரிடம் அவர் கோரிக்கையும் விடுத்தார். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வாவும் கலந்து கொண்டார்.

# பொலிஸ் அதிகாரிகள் இருவரை தீவைத்து கொளுத்த முயற்சி

## நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர துப்பாக்கிச் சூடு: ஒருவர் காயம்







அங்கொடை பொலிஸ் அதிகாரிகளின் வாகனத்துக்கு தீ வைக்க முயற்சித்த சம்பவமொன்று நேற்று முன்தினம் (10) இரவு இடம் பெற்றுள்ளது.

அங்கொடை பிரதேசத்தில் சிலரினால் தாக்கப்பட்ட பஸ்ஸை எடுத்துச் செல்வதற்காக வந்த இராணுவத்தின் வாகனம் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் இருவர் நேற்று முன்தினம் அந்தப் பிரதேசத்துக்குச் சென்றிருந்த சந்தர்ப்பத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த சந்தர்ப்பத்தில் அவ்விடத்துக்கு வந்த சிலரினால் அதிகாரிகள் தாக்கப்பட்டுள்ளனர். அதன்போது இராணுவ அதிகாரிகள் வந்த வாகனம் அவ்விடத்திலிருந்து திரும்பிச் சென்றுள்ளதுடன் அதன் பின்னர், பொலிஸ் அதிகாரிகள் இருவரையும் ஜீப்புக்குள் வைத்து தீ வைப்பதற்கு அவர்கள் முயற்சித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முல்லேரியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வருகை தந்துள்ளனர். முல்லேரியா பொலிஸ் நிலைய அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வருகை தந்தபோது பொலிஸாரை ஜீப்புக்குள் வைத்து தீ வைக்க அங்கிருந்த சிலர் முயற்சித்துள்ளனர். அதனைத் தொடர்ந்து பொலிஸ் அதிகாரிகள் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டில் நபரொருவர் காயத்துக்குள்ளாகியுள்ளதுடன் அவர் தற்போது கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருகின்றார்.

இதேவேளை, ரத்கம பிரதேச சபை தலைவர் தாக்குதல் நடத்தியுள்ளதுடன், அதன்போது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் காயங்களுக்குள்ளான ஆறு பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரத்கம பிரதேச சபையின் தலைவர் டீ. நிமலின் வீட்டுக்கும் நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அதன்போது, பிரதேச சபைத் தலைவர் உள்ளிட்ட அவர்களின் குடும்பத்தார் அங்கிருந்து தப்பித்துச் செனறுள்ளனர். அதனைத் தொடர்ந்து வீடு முழுமையாக தீவைக்கப்பட்டுள்ளது. இதன்போது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் காயங்களுக்குள்ளான ஆறு பேர் கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# சஷீந்திர ராஜபக்ஷ எம்.பியின் வீட்டின் மீதும் தீ வைப்பு





(கெலும் குணதிலக்க)

மொனராகலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சஷீந்திர ராஜபக்ஷவின் கிரிஹிப்பான்ஹார வீட்டின் மீது இனந்தெரியாதவர்களால் கடந்த 09ஆம் திகதி தீ வைக்கப்பட்டுள்ளது.

தீயினால் வீடு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதுடன் வீட்டுக்குள் இருந்த பொருட்களும் முழுமையாக சேதமடைந்துள்ளன.

# சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தென்னக்கோன் தாக்கப்பட்ட சம்பவம்!

## சந்தேகநபர்கள் இருவருக்கு இன்றுவரை விளக்கமறியல்



மேல்மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை தாக்கிய சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரை இன்று வரை (12) விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவரும் நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்ததுடன், கொழும்பு மேலதிக நீதவான் சிலனி பெரேராவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சந்தேகநபர்களை இன்றைய தினம் அடையாள அணிவகுப்புக்குட்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சந்தேக நபர்கள் இருவரும் கொள்ளுப்பிட்டி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் கைதான மேலுமொரு சந்தேகநபர் சுகயீனம் காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸாரினால் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# தவறான கூட்டணியினால் கோட்டாவின் கழுத்து அறுக்கப்படும் நிலைமை

## நளின் பண்டார எம்.பி. சுட்டிக்காட்டு



ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சனத் நிஷாந்த போன்றோருடன் இணைந்து பணியாற்றியதன் காரணமாக, கோட்டாபய ராஜபக்ஷவின் கழுத்து அறுப்படும் நிலைமை இன்று தோற்றம் பெற்றுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று அல்லது நாளை பதவியிலிருந்து விலக வேண்டும். அதனைத் தவிர தீர்வுகள் எதுவுமில்லை. தற்போது நாட்டிலுள்ள நிலைமையில் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை ஒன்றுக்காக கூட அமர முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். நாட்டில் நேற்று முன்தினம் நடந்த சம்பவத்தை வன்மையாக கண்டிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ போன்றவர்கள் பழைய அரசியலை மீண்டும் செய்யலாம் என நினைக்கின்றனர். அது நடக்காது. இதன் காரணமாகவே நாடு பற்றி எரிந்தது. இவர்களுக்கு மக்களின் கஷ்டங்கள் புரியாது.

மக்கள் உண்ண உணவின்றி, குடிக்க தண்ணீர் இன்றி, மருந்துகள் இன்றி வாழ்க்கையை கொண்டு நடத்த முடியாது தவிக்கும்போது, இவர்கள் பலவந்தமாக மக்களின் வீதி போராட்டத்தை அடக்க முயற்சித்தனர்.

இதன் காரணமாக அவர்கள் வீடுகளை கூட இழக்க நேரிட்டது என்பதை மிகவும் கவலையுடன் நாங்கள் கூறிக்கொள்கிறோம். எனினும், இந்த நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும். இது தொடர்ந்தால் நாடு ஸ்திரத்தன்மையை இழக்கும்.

நாட்டுக்கு தற்போது வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருவதில்லை. தயவு செய்து உடனடியாக நாட்டின் ஜனாதிபதி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு பதவி விலக வேண்டும்.

இதனைத் தவிர வேறு தீர்வுகள் இல்லை. ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடைக்கால அரசாங்கம், கூட்டு அரசாங்கம் பற்றி சிந்திக்க முடியாது. இவர்கள் நடந்துகொண்ட விதத்திற்கமைய கோட்டாபய ராஜபக்ஷ இடத்திற்கு செல்லவோ, பேச்சுவார்த்தை நடத்தவோ எங்களால் முடியாது.

நாங்கள் மக்களுடன் இருப்பதே இதற்கு காரணம். உடனடியாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகிச் சென்றால், குறுகிய காலத்திற்குள் ஜனாதிபதி மற்றும் பிரதமரை நாடாளுமன்றத்தின் மூலம் நியமித்து, மிகவும் குறுகிய கால நிகழ்ச்சி நிரலின் கீழ் மக்களின் நிலைப்பாட்டை அறிய வேண்டும்.

தற்போது பல்வேறு குழுக்கள் ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவியை பெற்றுக்கொள்ள ஆர்வம் காட்டி வருவதுடன் பெயர்களையும் வெளியிட்டுள்ளனர்.

எனினும், ஜனாதிபதி மற்றும் பிரதமரை தெரிவு செய்யும் பொறுப்பை மக்களிடம் ஒப்படைக்க வேண்டும். அப்போதே நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த முடியும் எனவும் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

# எவன்கார்ட் நிறுவனத்தின் பிரதான அலுவலகத்தின் மீது தாக்குதல்













எவன்கார்ட் நிறுவனத்திற்கு சொந்தமான ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டேயில் அமைந்துள்ள பிரதான அலுவலகம் நேற்று முன்தினம் தாக்கப்பட்டுள்ளது.

காலிமுகத்திடலில் போராட்டம் நடத்திவரும் போராட்டக்காரர்களுக்கு ஆதரவான மக்கள் இந்த தாக்குதலை நடத்தியுள்ளதாக கூறப்படுகிறது. தாக்குதலில் அலுவலகத்தின் கண்ணாடிகள் உடைந்து சேதமாகியுள்ளன.

அத்துடன் அலுவலகத்திற்குள் இருந்த சில உடைமைகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

# கொழும்பு - அநுராதபுர மாவட்டங்களில் பலத்த பாதுகாப்பு

(மன்னார் நகர் நிருபர்)

நாடளாவிய ரீதியில் ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் கொழும்பு மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பை சூழவுள்ள பகுதிகளில் முப்படையினர் இணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதுடன், மாவட்டத்திற்குள் நுழையும் வெளிச்செல்லும் வாகனங்கள் கடுமையாக சோதனைக்குட்படுத்தப்படுவதுடன் அனுமதி பெறாத வாகனங்கள் எச்சரிக்கப்பட்டு திருப்பியனுப்பப்படுகின்றன.

அதேநேரம், அநுராதபுரம் மாவட்டத்தின் பிரதான நுழைவு பகுதிகளில் அதிகளவான இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன், ஆயுதம் தாங்கிய மோட்டார்சைக்கிள் பிரிவினரும் கடமையில் உள்ளமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

பெரும்பாலான பகுதிகளில் மக்களின் நடமாட்டம் குறைவாக காணப்படுவதுடன், ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கு பொலிஸ் பாதுகாப்பும் விசேடமாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மலையகத்தில் கடும் மழையினால் வெள்ளப்பெருக்கு: பல பிரதேசங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை

(ஆர்.யோகேசன், செ.தி.பெருமாள்)

மலையகத்தில் நேற்றும் நேற்று முன்தினமும் இடியுடன் கூடிய கடும் மழை மற்றும் காற்று காரணமாக பல பிரதேசங்களில் மரங்கள் முறிந்துவீழ்ந்து குடியிறுப்புகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதோடு ஆறுகளில் வெள்ளநீர் பெருக்கெடுத்து ஓடுவதையும் அவதானிக்க முடிந்தது.

அந்தவகையில், நேற்று அதிகாலை தியகல - நோட்டன் வீதியில் மண்சரிவு ஏற்பட்டதால் அப்பகுதியில் குறித்த நேரத்திற்கு பாற்பண்ணை மீது வீழ்ந்து குறித்த பாற்பண்ணைக்கு பகுதியளவில் சேதம் ஏற்பட்டதோடு குடியிருப்புகளுக்கு செல்லும் மின் இணைப்புகளும் துண்டிக்கப்பட்டன. இதனால் அப்பகுதியின் ஒரு சில குடியிருப்புகளுக்கு பலமணிநேரம் மின்சாரம் தடைபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக குடியிருப்பு பகுதிகளில் மின்சாரமின்றி மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு உட்பட்டனர்.

மேலும் கடந்த இரு நாட்களாக பெய்த கடும் மழை காரணமாக நீரேந்து பிரதேசங்களில்











போக்குவரத்திற்கான தடை ஏற்பட்டிருந்தது. பின்னர் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் வீதியில் விழுந்திருந்த மண் மேட்டினை அப்புறப்படுத்தியதை தொடர்ந்து போக்குவரத்து மீண்டும் வழமைக்கு திரும்பியது.

தியகல தோட்ட குடியிருப்புகளுக்கு அண்மித்த பகுதியில் மரம் ஒன்று முறிந்து குறிப்பிடத்தக்கதான ஆறுகளிலும் நீரோடைகளிலும் வெள்ளநீர் பெருக்கெடுத்ததையும் அவதானிக்க முடிந்ததோடு, அணைக்கட்டுகளின் நீர் மட்டம் அதிகரித்துள்ளதையும் அவதானிக்க முடிந்தது.

இதேவேளை, கெனியோன் நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் இரண்டு திறக்கப்பட்டுள்ளன. மேலும் காசல்றீ, மவுசாக்கலை ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் அதிகரித்து நீர் நிறைந்து வெளியேறுவதாக நீர் மின் நிலைய அதிகாரி தெரிவித்தார். எனவே பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

நோட்டன் அட்லிஸ் பகுதியில் அமைந்துள்ள ஆலயத்துக்கு அருகிலும் பாரியளவில் மண் திட்டுகளும் சரிந்துள்ளதுடன் நோட்டன் நகரில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு முன்பாகவும் மண்சரிவும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, அடைமழை காரணமாக களுத்துறை, மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

பலத்த மழை பெய்யும் சந்தர்ப்பங்களில், மலைப்பாங்கான பகுதிகளில் வசிக்கும் மக்களை எச்சரிக்கையுடன் செயற்படுமாறும் தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் கேட்டுக்கொண்டுள்ளது.

# வன்முறை ஊடாக தீர்வைப் பெறமுடியாது

## டக்ளஸ் எம்.பி.

(யாழ். நிருபர்)

எமக்கிடையில் இருக்கின்ற அரசியல் வேறுபாடுகளுக்கப்பால், கலந்துரையாடல்களை மேற்கொண்டு எமது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கான தீர்வைக் காண்போம். எமது எதிர்காலத்தையும் எமது தாய்நாட்டையும் பாதுகாப்போம் - என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

உங்களின் உணர்வுகளையும் அதில் இருக்கின்ற நியாயங்களையும் நாங்கள் புரிந்து கொள்கின்றோம்; அதற்கு மதிப்பளிக்கின்றோம்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டும் - மக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்கள் களையப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகவும் இருக்கின்றது. ஆனால், எத்தகைய பிரச்சினைகளையும் வன்முறைகளுக்கூடாக தீர்க்க முடியாது என்பதை நீண்டகாலமாகவே வலியுறுத்தி வருகின்றவர்கள் நாம்.

இதன்காரணமாக புலிகள் எம்மில் பலரை கொலை செய்திருக்கின்றார்கள். என்னை கொலை செய்வதற்கு பல்வேறு முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கின்றார்கள். எனினும், தென்னிலங்கையில் வாழ்ந்து வருகின்ற சிங்கள மக்களுடன் தேசிய நல்லிணக்கத்தையும் நல்லுறவையும் வலுப்படுத்துவதன் மூலமே பிரச்சினைகளை தீர்க்க முடியும் என்பதை உறுதியுடன் தெரிவித்து வந்துள்ளோம்.

அதனடிப்படையிலேயே எமது அரசியல் செயற்பாடுகளும், தென்னிலங்கை மக்களுடனும் அரசியல் கட்சிகளுடனான எமது உறவும் இருந்துவருகின்றது. இந்த அணுகுமுறையையே உங்களுடனும் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். வன்முறைகள் ஊடாக எமது பிரச்சினைகளை தீர்க்க முடியாது.



எனவே, எமக்கிடையில் இருக்கின்ற அரசியல் வேறுபாடுகளுக்கப்பால், கலந்துரையாடல்களை மேற்கொண்டு எமது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கான தீர்வைக் காண்போம். எமது எதிர்காலத்தினையும் எமது தாய்நாட்டினையும் பாதுகாப்போம் - என்றுள்ளது.

# தம்புள்ளையில் லொறிகளில் தேங்கிக்கிடக்கும் மரக்கறிகளால் உற்பத்தியாளர்கள் கவலை

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவால் தம்புளை பொருளாதார மத்திய நிலையத்துக்கு மரக்கறிகளை கொண்டு வந்து விற்பனை செய்யும் உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் கடந்த இரண்டு தினங்களாக நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து கொண்டு வரப்பட்ட மரக்கறிகள் லொறிகளிலிருந்து இறக்கப்படாமல், தம்புளை பொருளாதார மத்திய நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் உற்பத்தியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, நேற்றைய தினமும் நாட்டின் அனைத்துப் பகுதிகளும் ஸ்தம்பித்திருந்த நிலையில் எவ்வாறு தமது உற்பத்திப்



பொருட்களை விநியோகிப்பது என்று குறித்த உற்பத்தியாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர். மேலும், இதனால் தமது வாழ்வாதார நிலை பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# கீரி கடிக்குள்ளாகிய பெண் உயிரிழப்பு



கீரி கடிக்குள்ளாகிய வயோதிபப் பெண் 3 மாதங்களின் பின் உயிரிழந்துள்ளார்.

அவரது உயிரிழப்புக்கு நீர்வெறுப்பு நோய் காரணம் என்று மருத்துவ அறிக்கையிட்டுள்ள நிலையில், அதனை உறுதிப்படுத்த வயோதிபப் பெண்ணின் மூளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

புலோலி ஆலடியைச் சேர்ந்த பாலசுந்தரம் மங்கையக்கரசி (வயது 69) என்ற வயோதிபப் பெண்ணே உயிரிழந்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் வயோதிபப் பெண்ணுக்கு கீரி கடித்துள்ளது. அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார். எனினும், அவருக்கு விலங்கு விசர் தடுப்பூசி மருந்து வழங்கப்படவில்லை.

இந்நிலையில் 3 மாதங்களின் பின் அவர் கடந்த திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார். அவரது உயிரிழப்புக்கு நீர்வெறுப்பு நோயே காரணம் என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

அவருக்கு நீர்வெறுப்பு நோய் ஏற்பட்டுள்ளதா என்பதனை உறுதிசெய்ய அவரது மூளை கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

# மனநிலை பாதிக்கப்பட்ட மகன் தள்ளி விழுத்தியதில் தாய் மரணம்

(சாவகச்சேரி நிருபர்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை வடக்கு பகுதியில் மனநலம் பாதிக்கப்பட்ட மகன் தள்ளி விழுத்தியதில் தாயார் உயிரிழந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வீட்டுப் படியால் ஏறிய தாயை மனநலம் பாதிக்கப்பட்ட மகன் தள்ளியதில் கீழே விழுந்து படுகாயமடைந்திருந்தார்.

இந்நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த தாய் நேற்று (11) அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மீசாலை வடக்கு பகுதியைச் சேர்ந்த 62 வயதான தாயாரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# ஜனாதிபதி இராஜினாமா செய்தால்தான் நாட்டில் ஏற்பட்டுள்ள மக்கள் புரட்சியை முடிவுக்குக் கொண்டுவர முடியும்

## செல்வம் எம்.பி. தெரிவிப்பு

(மன்னார் நகர் நிருபர்)

மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி ஆகியோர் காலம் கடந்து முடிவுகள் எடுப்பது தவறு. மக்கள் விரும்பவில்லையென்றால் அவர்கள் தமது பதவிகளை விட்டுச் செல்லவேண்டும் என்பதே காலத்தின் நீதி. பிரச்சினைகளை ஏற்படுத்தி இன முறுகலை தூண்டிவிட்டு இழப்புகளை சந்தித்த பின்பு தமது பதவிகளை இராஜினாமா செய்வது என்பது முட்டாள்தனம் - என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு மிகவும் கொந்தளிப்பான நிலையில் இருந்துகொண்டு இருக்கின்றது. சிங்கள தேசத்தில் போராட்ட வடிவில் பல விடயங்கள் நிகழ்ந்துகொண்டு இருக்கின்றன. மஹிந்த ராஜபக்ஷவின் ஆரம்பப் பிரச்சினையே இன்று பாரியளவில் வெடித்துள்ளது.

பொருளாதாரப் பிரச்சினை பின்தங்கிய நிலையிலே இவ்வாறான ஒரு சூழலை உருவாக்கி மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவருடைய அரசாங்கம் மிக மோசமான ஒரு சூழலை உருவாக்கி உள்ளது என்பதை பார்க்கும்போது இது ஒரு கண்டனத்திற்குரிய விடயமாக உள்ளது.

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் மிக அவதானமாக இருக்கவேண்டும். எங்களுடைய பங்களிப்பு குறித்த விடயங்களில் இருக்கின்றபோது விடுதலைப் புலிகளை காரணங்காட்டி திசை திருப்புகின்ற கெட்டித்தனம் இந்த அரசாங்கத்திடம் இருக்கின்றது. விடுதலைப் புலிகளை காரணம்காட்டி சிங்கள மக்களை திசை திருப்புகின்ற ஒரு நிலையை அவர்கள் ஏற்படுத்துவதற்கு நாங்கள் அனுமதிக்கக்கூடாது.

காலச்சக்கரம் சுழன்றுகொண்டு இருப்பதை பார்க்கின்றபோது இந்த மே மாதத்தில் தமிழ் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை சந்தித்தார்கள். உயிர் அவலம் ஏற்பட்டது. மே 18இல் எமது மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்களின் சடலங்கள் புதைக்கப்பட முடியாத நிலையில், அநாதையாக கைவிடப்பட்டன. தனது தந்தை மற்றும் உறவுகள் உயிரிழந்து சடலமாக கிடக்கும்போது அதனை தாண்டி வருகின்ற அவலமான சூழ்நிலை ஏற்பட்டது.

மே மாதம் என்பது எமது மக்களின் மனங்களில் நிலைத்து நிற்கின்றது. எங்களுடைய மக்களுக்கு எதிராக செயல்பட்டவர்களுக்கு எதிராக இந்த மே மாதத்தில் நிலைமைகள் மாறி இருப்பது கவலை தருகின்ற விடயமாக இருந்தாலும், இறைவன் ஒரு நியாயமான செயல்பாட்டை மேற்கொண்டுள்ளார் என்று நாங்கள் கருத முடியும்.

சிங்கள மக்கள் மத்தியில் நாங்கள் வருத்தத்தை தெரிவித்துக்கொள்கிறோம். அவர்களுக்கும் பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. சிங்கள மக்களால் ஆதரிக்கப்பட்ட சம்பந்தப்பட்டவர்கள் இன்று இந்த மக்களாலேயே துரத்தப்பட்டு பழிவாங்கப்படுகின்றனர்.

காணாமலாக்கப்பட்டவர்களின் போராட்டங்கள் உள்ளிட்ட எமது மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் இறைவனின் நாட்டம் எம் மக்களுடன் உள்ளது என்பதை உணர்ந்துகொள்ள முடிகிறது.

தமிழர்களாகிய நாங்கள் முழுமையாக குறித்த போராட்டங்களில் இணைந்துகொண்டிருந்தோம் என்றால் இந்த அரசாங்கம், ஜனாதிபதி ஆகியோர் குறித்த போராட்டத்தை எமது பக்கம் திசை திருப்பி விடுதலைப் புலிகளின் மீளாக்கம் அல்லது விடுதலைப் புலிகள் குறித்த போராட்டத்தில் கலந்துகொண்டுள்ளார்கள் என்று கூறுகின்ற ஒரு நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கம் ஏற்படுத்தி எங்களுக்கு எதிராக ஒரு வன்முறையை தூண்டி விடுகின்ற வாய்ப்புகள் இருக்கின்றன.

எனவே தமிழ் மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். இக்காலகட்டத்தில் மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் நாடு முழுமையாக ஸ்தம்பிதமடைந்துள்ளது. அன்றாடம் உழைத்து உண்கின்ற மக்கள் தற்போதைய சூழலில் கஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர். மேலும் எரிவாயு, எரிபொருட்கள் இல்லை. இதனால் விவசாயிகள், மீனவர்கள் ஏனைய கூலித் தொழிலாளர்கள் பல்வேறு துயரங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

ஜனநாயக ரீதியில் போராட்டங்கள் இடம்பெற்றபோது தலைவர்கள் நிதானமாக ஆரம்பத்தில் இராஜினாமா செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்ட அந்த சூழ்நிலையில், அந்த விடயத்தை அவர்கள் கையாண்டிருந்தார்கள் என்றால் இன்று இந்த தலைவர்கள் மக்களினால் மதிக்கப்பட்டிருப்பார்கள்.

ஆனால் அவர்களின் இறுமாப்பு மற்றும் ஆயுதப்போராட்டத்தை எவ்வாறு அடக்கி விட்டோம் என்றதுபோல் சிங்கள மக்களின் இந்தப் போராட்டத்தையும் அடக்கலாம் என்று கற்பனையுடன் அவர்கள் செயற்பட்டுள்ளனர். அது இன்று வினையாக மாறியுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி ஆகியோர் காலம் கடந்து முடிவுகள் எடுப்பது தவறு. மக்கள் விரும்பவில்லை என்றால் அவர்கள் விட்டுச்செல்ல வேண்டும் என்பதே காலத்தின் நீதி.



பிரச்சினைகளை ஏற்படுத்தி இன முறுகலை தூண்டிவிட்டு இழப்புகளை சந்தித்த பின்பு தமது பதவிகளை இராஜினாமா செய்வதென்பது முட்டாள்தனம். மக்கள் இன்றும் பல பிரச்சினைகளை சந்திக்கின்றனர்.

எனவே ஜனாதிபதி இராஜினாமா செய்ய வேண்டும். அப்போதுதான் நாட்டில் ஏற்பட்டுள்ள மக்கள் புரட்சியை முடிவுக்குக் கொண்டுவர முடியும் – என்றார்.

# பொதுச் சொத்துகளை கொள்ளையடிப்பவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## பாதுகாப்பு செயலாளர் எச்சரிக்கை



பொதுச் சொத்துகளைக் கொள்ளையடிப்பவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். நாட்டை நேசிக்கும் இலங்கைப் பிரஜைகள் என்ற ரீதியில் அவர்களது சகஜ வாழ்க்கை நிலைக்கு தடை ஏற்படாத வகையில் அமைதியை முன்னெடுப்பது மிக முக்கியமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நேற்று முன்தினம்(10) ஏற்பட்ட துர்ப்பாக்கிய சம்பவம் காரணமாக தாக்குதல், தீ வைப்பு மற்றும் மரணம் போன்ற நிலைமைகளை காண முடிந்தது.

இவர்கள் அனைவரும் எமது நாட்டு பிரஜைகள். இலங்கையர்கள். எத்தகைய அரசியல் கருத்துகளைக் கொண்டிருந்தபோதிலும், எத்தகைய அரசியல் கட்சியை சார்ந்திருந்தபோதிலும் இவர்கள் அனைவரும் இலங்கையர்கள். எனவே இன்று இந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களிடம் அன்பானவர்களிடம் நான் கேட்டுக்கொள்வது என்னவெனில், வன்முறையிலான செயற்பாட்டை நிறுத்துங்கள்.

உங்களுக்கு தேவையான ரீதியில் ஜனநாயக ரீதியில் எவருக்கும் தீங்கு ஏற்படாத வகையில், சொத்துகள் அதாவது தனிப்பட்ட மற்றும் அரசாங்க சொத்துகளுக்கு தீவைக்காது அமைதியான முறையில் உங்களது போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறில்லாது எமது நாட்டின் சகோதர மக்களின் ஒருபிரிவை கொலை செய்து அல்லது தாக்கி அவர்களது சொத்துகளை தீயிட்டுக் கொளுத்தி அழிக்க வேண்டாம். இவ்வாறு செயல்பட்டால் அதாவது சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்ட கடமைப்பட்டுள்ள நாம் அதாவது எம்மிடமிருந்து சட்டத்தை நீங்கள் கையில் எடுத்தால் எமது நாட்டுக்கு எதிர்காலம் இல்லை.

இந்த நாடு உங்களுக்கே உரித்தானது. அப்படியானால், அமையற்ற நிலையில் செயல்படுவதை நிறுத்தி உங்களது போராட்டத்தை அமைதியுடன் முன்னெடுத்துச் செல்லுங்கள். தற்போது பின்புலனான அரசு ஒன்று இல்லாததினால் அமைதியற்ற முறையில் செயல்பட்டு பொலிஸ் அதிகாரிகளை தாக்கியும் சொத்துகள் பலவற்றுக்கு சேதம் விளைவித்த சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

வீடுகளுக்கு தீவைப்பு சம்பவங்கள் 104 இடம்பெற்றுள்ளன. 60 வாகன தீவைப்புச் சம்பவங்களும் வாகனங்களுக்கு சேதம் ஏற்படுத்திய 40 சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. எமது நாட்டுப் பிரஜைகள் 219 பேர் காயமடைந்துள்ளனர். 08பேர் உயிரிழந்துள்ளனர். 2 பொலிஸாரும் 6 பொது மக்களும் இதில் இடம்பெற்றுள்ளனர்.

இதேவேளை, மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மீது தாக்குதல் நடத்தியதாகச் சந்தேகிக்கப்படும் இருவரை கொள்ளுப்பிட்டி பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர் பேரே வாவி அருகிலுள்ள பாதையொன்றில் தனது உத்தியோகபூர்வ வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்தபோது சிலர் அவரை வாகனத்தில் இருந்து இறக்கி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

ரத்கம பிரதேச சபைத் தலைவரின் வீட்டில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர். இவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ரத்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர். பிரதேச சபைத் தலைவரின் வீட்டிற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

# துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கான உத்தரவு சட்டவிரோதமானது

## சுமந்திரன் எம்.பி. அறிவிப்பு



சொத்துகளுக்கு சேதம் விளைவிப்பவர்கள் மீது முப்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தலாம் என்கிற உத்தரவு சட்டவிரோதமானது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பொது சொத்துகள் அல்லது தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் விளைவிப்பவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முப்படையினருக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் அனுமதி வழங்கப்பட்டதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் லெப்டினன்ட் கேர்ணல் நலின் ஹேரத் தெரிவித்தார்.

இந்நிலையில் இது தொடர்பாக தனது டுவிட்டர் தளத்தில் கருத்து தெரிவித்த எம்.ஏ. சுமந்திரன்,அரசியலமைப்பின் 52(3) பிரிவின்படி அமைச்சரவை கலைக்கப்படும்போது அனைத்து அமைச்சின் செயலாளர்களும் பதவி வகிப்பதை நிறுத்துவார்கள்.

அந்த வகையில், பொது சொத்துகள் அல்லது தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் விளைவிப்பவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முப்படையினருக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்டதாக கூறப்படும் அனுமதி சட்டவிரோத உத்தரவு என பதிவிட்டுள்ளார்.

# முன்னிலை சோசலிசக் கட்சி உறுப்பினரின் கூற்றை நிராகரிப்பதாக இராணுவத் தளபதி தெரிவிப்பு



பாதுகாப்புப் பிரிவினரைக்கொண்டு பொது மக்கள் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு பொது மக்களை குழப்பும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக முன்னிலை சோசலிசக் கட்சியின் துமிந்த நாகமுவால் முன்வைக்கப்பட்ட கருத்தை முழுமையாக மறுப்பதாக பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

பொது மக்களை தவறான பக்கத்தில் திசைதிருப்பும் வகையில் பிரசாரம் மேற்கொள்ளப்படுவதனை முப்படை முழுமையாக நிராகரிக்கிறது.

பாதுகாப்புப் படையினர் ஒருபோதும் பொது மக்களை தூண்டிவிடும் வகையிலான மோசமான செயற்பாடுகளில் ஈடுபடுவதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படலாம்!

## அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபடுமாறு மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள வன்முறைச் சூழல் தொடர்ந்தால், வைத்தியசாலைகளில் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பொதுக்குழு உறுப்பினர் பிரசாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இது ஏற்கனவே ஏற்பட்டுள்ள மருந்து பற்றாக்குறையை மோசமாக்கும். எனவே, அமைதியான முறையில் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு அருகாமையிலும் காலி முகத்திடலில் நிராயுதபாணிகளான பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலையும் வன்மையாக கண்டிக்கிறோம்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அமையின்மையினால் நோயாளர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகின்றது. இந்நிலைமை தொடர்ந்து நீடிக்குமாக இருந்தால் நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம். அவ்வாறு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில் நாட்டில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையில், சுகாதாரத்துறை இக்கட்டான சூழ்நிலையை சந்திக்க நேரிடும்.

இந்நிலைமையை தவிர்த்துக்கொள்ள வேண்டுமாயின், போராட்டங்களை முன்னெடுப்பவர்கள் அமைதியான முறையில் முன்னெடுக்க வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றோம் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

# இன வேறுபாடின்றி எமது நாடென்று எண்ணும் நிலை நாட்டில் தோற்றம் பெற்றுள்ளது

## பேராசிரியர் அமிந்த பெரேரா தெரிவிப்பு

(இக்பால் அலி)

நெருக்கடியான சூழல் தென்பட்டாலும், மிகவும் அழகான காட்சி தென்படுகின்றது. மீண்டும் நாங்கள் எல்லோரும் ஒரு கொடியின் கீழ் வந்திருக்கின்றோம். நாங்கள் தேசியக் கொடியை தூக்கிக்கொண்டு சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்களாகிய நாங்கள் அனைவரும் எமது நாடு என்று பேசுமளவுக்கு வந்திருக்கின்றோம். இதுதான் நாட்டின் புதிய மாற்றமும் புதிய எழுச்சியுமாகும் என்று வயம்ப பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை தலைவர் பேராசிரியர் அமிந்த பெரேரா தெரிவித்தார்.

சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் நல்லிணக்கத்திற்கான மையத்தின் அனுசரணையுடன் பல்லின மக்கள் கலந்துகொண்ட நோன்புப் பெருநாள் சமூக கலாசார நிகழ்வு குருநாகல் சியாம்பலாகஸ்கொட்டுவ அந்நூர் அரபுக் கல்லூரி மற்றும் சியம்பலாகஸ்கொட்டுவ சமூக அமைப்புகளின் ஏற்பாட்டில் சியம்பலாகஸ்கொட்டுவ ரிச்வி ரிசப்சன் மண்டபத்தில் அரபுக் கல்லூரியின் அதிபர் மௌலவி செகுதாவூத் முனவ்வர் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிறப்புரை நிகழ்த்தியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு 30 வருடம் யுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்தது. இக்கால கட்டத்தில் நாடு அபிவிருத்தியடைந்துள்ளது என்பது பற்றி நாங்கள் ஆச்சரியப்பட வேண்டும். 30 வருட யுத்தத்தின் போது சுற்றுலாத் துறை பாதிக்கப்பட்டது. உற்பத்தித்துறை பாதிக்கப்பட்டது. அந்த வகையில் நாங்கள் பாரியளவிலான வீழ்ச்சி நிலைக்கு சென்றோம். அதன் பின்னர் 2009களில் யுத்தம் நிறைவுக்கு வந்தது. அதற்குப் பின்னர் 2015 களில் சில சில தேவைகளுக்காக இன ஒற்றுமை சீர்குலைக்கப்படுகிறது.

முஸ்லிம் அடிப்படைவாதிகள், சிங்கள அடிப்படைவாதிகள் எனப் பேசப்படுகிறது. பொதுபலசேனா, சிங்கள மாசேனா பலகாய உள்ளிட்ட பல அமைப்புகள் தத்தம் தேவைக்காக தோற்றம் பெற்றவை. அதன் நடவடிக்கையின் காரணமாக நாங்கள் எல்லோரும் அதற்குள் சிக்குண்டு பின்தள்ளப்பட்டோம். அதற்குப் பின்னர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்றது.

தற்போது நாட்டில் மிகவும் அழகான சூழல் உருவாகியுள்ளது. எனினும் பொலிஸார் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகிறார்கள். விடுமுறைகளை இரத்துச் செய்யப்பட்டுள்ளன. எனினும், அதற்குள் எந்தளவுக்கு மோசமான செயற்பாடுகள் நடைபெற்றாலும் மிகவும் அழகான காட்சி தென்படுகின்றது.

மீண்டும் நாங்கள் எல்லோரும் ஒரு கொடியின் கீழ் வந்திருக்கின்றோம். நாங்கள் தேசியக் கொடியை தூக்கிக்கொண்டு சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்களாகிய நாங்கள் எமது நாடு என்று பேசுமளவுக்கு வந்திருக்கின்றோம். இதுதான் மிகவும் நல்ல விடயம். பொருளாதார நெருக்கடி அல்லது வேறு பிரச்சினைகள் வந்தாலும் இது மிகவும் பெறுமதியானது. அது கோல்ட் பேஸ், அல்லது வேறு எந்த இடத்தினாலும் சரி இந்தச் செயல்திட்டத்தை நாம் எல்லோரும் முன்னெடுத்துச் செல்வோம். தற்போது எமக்கிடையே காணப்பட்ட இனவேறுபாடு போதும். சிங்களம், முஸ்லிம் தமிழர் எனப்படுவோர் அனைவரும் ஒன்று.

என்னுடைய பிறந்த ஊர் அம்பாறை, நாங்கள் ஹிங்குராணை விடுதியில் தான் இருந்தோம். அந்த விடுதி ஒரு சுவரினால் பிரிக்கப்பட்டிருந்தது. ஒரு பக்கம் நாங்கள் மறுபக்கம் முஸ்லிம் குடும்பத்தினர்கள் இருந்தார்கள். எனக்கும் என்னுடைய சகோதரிக்கும் ஒரு வயது இருக்கும். அம்மாவுக்கு என்னைப் பார்த்துக் கொள்ள முடியாது.





நான் அடுத்த வீடான முஸ்லிம் குடும்பத்திலே தான் வளர்ந்தேன். அந்த வீட்டிலும் சிங்களம் பேசுவார்கள். எனக்கு தமிழ் தெரியாது. நான் ஏழு வருடம் அந்த வீட்டில் வளர்ந்தேன். அதிகம் தூங்கி எழும்புவது அந்த வீட்டில் தான். அது தான் உண்மை. அந்த வீட்டில் நஜீமா, ஜெஸீமா, நவாஸ் போன்ற என்னுடைய சகோதரிகள் நண்பர்களும் இருந்தார்கள்.

பின்னர் நான் கல்வியைத் தொடர மாத்தளை பாடசாலைக்கு வந்தேன். அங்கும் என்னைப் பார்த்து முஸ்லிம்களுடைய பெயரிலேயே அழைப்பார்கள். எங்கள் குடும்பத்திலும் முஸ்லிம் என்ற பெயரிலேயே அழைப்பார்கள். ஜெஸீமா சகோதரிகள் என்னை கைப்பருவத்தில் முஸ்லிம் பெயர் கொண்டுதான் அழிப்பார்கள். அந்த சூழலில் தான் வளர்ந்தேன். எனக்கு அம்பாறை மீது மிகவும் விருப்பம். விடுமுறை காலங்களில் நான் அவர்களை அம்பாறைக்கு சென்று பார்க்காமல் இருப்பதில்லை.

நான் மரணிக்கும் போது இப்படியான நல்லதொரு அழகான சூழலில் மரணிக்க முடியுமென்றால் எனக்கு மிகுந்த ஒரு ஆசை. அந்தப் பழைய ஞாபகங்கள் இப்பொழுது எனக்கு ஏற்படுகிறது. 1970களில் காணப்பட்ட அழகிய சூழல் இப்போது காணப்படுகிறது.

இதைப்போன்று தான் நாங்கள் குருநாகலில் நாட்டின் பிரஜைகள் என்று ஆரம்பித்திருக்கின்றோம். நாங்கள் எல்லோரும் ஒரு தாய் நாட்டின் பிரஜைகள் என்ற அடிப்படையில் ஒன்று சேர்வோம். நாங்கள் ஒன்று சேர்ந்து வேலை செய்வோம். நாங்கள் நிறைய வேலைகள் செய்யலாம். எங்களுடைய எதிர்காலச் சந்ததியினர்களின் நலன்கருதி நாங்கள் எல்லோரும் ஒன்றுபடுவோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சமயங்களுக்கான ஜனாதிபதியின் ஆலோசகர் மியுகுனாராம ரஜமஹா விஹாராதிபதி கொழும்ப கம தேரர், பொத்துவெவ ஸ்ரீசேல தலாராமாதிபதி கட்டுகம்பொல ஹத்பத்து, உப பிரதான சங்கநாயக போகாபிடியே தம்விஸ்ஸர சுவாமி, கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளர் எம்.ஆர். இம்ரான், நாரம்மல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரஞ்ஜித் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.








நாடு முழுவதும் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், மொனராகலை நகரம் நேற்று (11) மக்கள் நடமாற்றமின்றி முழுமையாக முடங்கியிருந்தது. (படங்கள் - மொனராகலை நிருபர்)

# அமெரிக்காவில் வறண்டுவரும் ஏரியில் கண்டெடுக்கப்படும் மனித எச்சங்கள்



அமெரிக்காவில் வேகமாக வறண்டுவரும் மீட் ஏரியில் அடுத்தடுத்து மனித எச்சங்கள் கண்டெடுக்கப்படும் சம்பவம் அங்கு அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகிறது.

அமெரிக்காவின் மிகப்பெரிய நீர்தேக்கமான மீட் ஏரியில், கடந்த 2000ஆம் ஆண்டுமுதல் நீர்மட்டம் தொடர்ந்து குறைந்து வருகிறது. இதற்கிடையில் காலநிலை மாற்றம், நிலைமையை தொடர்ந்து மோசமாக்கி வருவதால் மீட் ஏரி முற்றிலுமாக வறண்டுபோகும் நிலைக்கு வந்துள்ளது.

இந்நிலையில், வேகமாக சுருங்கிவரும் மீட் ஏரியில் அடுத்தடுத்து மனித எச்சங்கள் கண்டெடுக்கப்படும் சம்பவம் மக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. அங்கு கடந்த மே முதலாம் திகதி முதன்முறையாக ஏரியின் கரையோரத்தில் சேற்றில் சிக்கிய பீப்பாய் ஒன்றில் உடலொன்று கண்டெடுக்கப்பட்டது.

இந்த உடல் 1970 அல்லது 1980களில் சுட்டுக்கொல்லப்பட்ட ஒருவருடையது என்று விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்நிலையில் அந்த உடல் கண்டெடுக்கப்பட்ட ஒரு வாரத்துக்கு பின்பு மீட் ஏரியிலிருந்து மேலும் பல மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும், இதுபற்றிய கூடுதல் தகவல்களை அதிகாரிகள் வழங்காத நிலையில், ஏரி முழுமையாக வறண்டு போகும்போது மேலும் பல உடல்கள் கண்டெடுக்கப்படலாம் என்று ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

உலக செய்திகள்

# உக்ரைனில் பலியானோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

## உத்தியோகபூர்வ எண்ணிக்கையை விட அதிகம் என்கிறது ஐ.நா.



உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்தப் போரில் உக்ரைன் பொதுமக்களில் இதுவரை மூவாயிரத்து 381 பேர் உயிரிழந்ததாக அரசின் அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், உக்ரைன் போரில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டதைவிட அதிகமாக ஆயிரக்கணக்கான பொதுமக்கள் உயிரிழந்திருக்கலாம் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உக்ரைன் விவகார கண்காணிப்புப் பிரிவுத் தலைவர் மாடில்டா பாக்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

உக்ரைனில் ரஷ்யா நடத்தி வரும் தாக்குதலில் உயிரிழந்த பொதுமக்களின் எண்ணிக்கையை கணக்கிட்டு வருகிறோம். ஆனால், அந்த எண்ணிக்கை தற்போது அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள எண்ணிக்கையைவிட ஆயிரக்கணக்கில் அதிகமாக இருக்கும் என்பதை மட்டும் என்னால் கூறமுடியும்.

மரியுபோல் நகரில் எத்தனை பேர் உயிரிழந்தனர் என்பதை அங்கு நேரில் சென்று தெரிந்துகொள்ள முடியாத காரணத்தினால், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள பொதுமக்கள் உயிரிழப்பு எண்ணிக்கை உண்மை நிலைவரத்தைவிட மிகக் குறைவாக இருக்கிறது - என்றார்.

மேலும், உக்ரைன் நிலைவரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை மிக அவதானமாக கண்காணித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மிரட்டுகிறது அசானி புயல்; சென்னையில் விமானங்கள் இரத்து!



அசானி புயல் காரணமாக சென்னை விமான நிலையத்தில் நேற்று 17 உள்நாட்டு விமானங்கள் இரத்துச்செய்யப்பட்டன.

வங்கக்கடலில் அந்தமான் அருகே உருவான அசானி புயல், தீவிரமடைந்து மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து வருகிறது.

நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் ஆந்திரப் பிரதேசத்தின் மசூலிப் பட்டினத்திலிருந்து 90 கிலோமீற்றர் தெற்கு, தென்கிழக்கில் மையம் கொண்டிருந்தது.

இது வடமேற்கில் நகர்ந்து ஆந்திரப் பிரதேச கடலோரப் பகுதிக்கு நேற்று வந்துசேரும் என்று வானிலை மையம் கணித்துள்ளது. அதன்பின்னர் இது திசைமாறி வடக்கு, வடகிழக்கு திசையில் நகரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் நேற்றுக் காலை புயலாகவும், நாளை தீவிர காற்றழுத்தமாகவும் வலு குறையும் என்று அதிகாரிகள் கணித்துள்ளனர்.

இந்த அசானி புயல் ஆந்திரா, ஒடிசா மாநிலங்களை மிரட்டிக்கொண்டிருக்கிறது. அத்தோடு தமிழகத்திலும் பரவலாக ஆங்காங்கே பலத்த காற்றுடன் மழை பெய்கிறது.

நேற்று அசானி புயல் காரணமாக சென்னையிலிருந்து விசாகப்பட்டினம் உட்பட நகரங்களுக்கு செல்லவேண்டிய 10 விமானங்கள் இரத்துச்செய்யப்பட்டன.

இந்நிலையில் இரண்டாவது நாளாக சென்னையிலிருந்து விசாகப்பட்டினம் செல்ல வேண்டிய 3 விமானங்களும், விஜயவாடா செல்லவேண்டிய 2 விமானங்களும் ராஜமுந்திரி செல்லவேண்டிய ஒரு விமானமும் இரத்துச்செய்யப்பட்டன.

# கடலில் மிதந்து வந்த தங்கத் தேர்!



ஆந்திர கடலில் தங்க முலாம் பூசப்பட்ட மர்மமான தேரொன்று மிதந்து வந்துள்ளது. இதனை மக்கள் ஆச்சரியத்துடன் பார்வையிட்டனர்.

வங்கக்கடலில் உருவான அதிதீவிர அசானி புயல், ஆந்திர கடலோரப் பகுதியில் நேற்று (11) கரையை கடக்கும் எனக் கூறப்பட்டது. இதனால், கடலோரப் பகுதிகளில் கனமழை பெய்யும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஆந்திர மாநிலம் ஸ்ரீகாகுளம் மாவட்டம், சுன்னப்பள்ளி கடற்கரைப் பகுதியில் தங்க நிறத்திலான தேரொன்று கடலில் மிதந்து வந்துள்ளது. இதனை பார்த்த மீனவர்கள் மற்றும் அப்பகுதி கிராம மக்கள் ஆச்சரியத்துடன் கரைக்கு இழுத்தனர்.

தங்க முலாம் பூசப்பட்ட அந்தத் தேர் அழகாக வடிவமைக்கப்பட்டிருந்ததால், மக்கள் ஆர்வமாக பார்த்து இரசித்தனர்.

இருப்பினும், இந்தத் தேர் எங்கிருந்து வந்தது என்னும் தகவல் தெரியவில்லை. இது தொடர்பாக கடலோர காவல் படை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு வந்த கடலோர காவல்படை அதிகாரிகள் தேரை மீட்டு ஆய்வு செய்தனர்.

தேரின் மீது வெளிநாட்டு மொழியில் எழுதப்பட்டிருப்பதால் வேறு நாட்டிலிருந்து மிதந்து வந்திருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.



உக்ரைனில் ரஷ்யப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட ஏவுகணைத் தாக்குதலையடுத்து சேதமடைந்த பாரிய கட்டடம் ஒன்றில் இரவுவேளையில் மீட்புப் பணியில் ஈடுபடும் படையினர்.



யேமனின் ஹெஸ்வேய்ன் பகுதியில் ஆயுததாரிகளால் நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னர் தனிமைப்படுத்தப்பட்ட பெண்ணொருவர் தனது கைக்குழந்தையுடன் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.



இந்தோனேசிய கடலில் விளையாட்டுகளில் ஈடுபடும் வீரர் ஒருவரை படத்தில் காணலாம். அங்கு கடல் மாசுபாடு அதிகரித்துள்ளமை குறித்து சூழலியலாளர்கள் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

# ட்விட்டருக்கு மீளத் திரும்புகிறார் ட்ரம்ப்



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் ட்விட்டர் கணக்கு தடைசெய்யப்பட்டுள்ள நிலையில், அது மீள கையளிக்கப்பட ஆராய்ந்து வருவதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

ட்விட்டரின் புதிய நிறைவேற்று அதிகாரியான எலன் மாஸ்க் ஊடகமொன்றுக்கு இந்தத் தகவலை தெரிவித்துள்ளார்.

தடைசெய்யப்பட்ட ட்விட்டர் கணக்கை மீட்டெடுக்கக் கோரி டொனால்ட் ட்ரம்ப் தொடர்ந்த மனுவை விசாரித்த நீதிபதி சில மாதங்களுக்கு முன்னர் அவர் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். அமெரிக்காவில் கடந்த ஆண்டு ஜனவரி ஆறாம் திகதி நடந்த வன்முறையைத் தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் ட்விட்டர் கணக்கு முடக்கப்பட்டது. மேலும், அவருடைய ட்விட்டர் உட்பட தவறான தகவல்களைப் பகிர்ந்ததற்காக 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ட்விட்டர் கணக்குகளுக்கு தடை விதிக்கப்பட்டது.

இதற்கிடையே, ட்விட்டரின் தலைமை நிதி அதிகாரி நெட் செகல், ட்விட்டரை பயன்படுத்த டொனால்ட் டிரம்பிற்கு ஒருபோதும் அனுமதி வழங்கப்பட மாட்டாதென ஏற்கனவே கூறியிருந்தார். இதனால் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்பால் ட்விட்டரை பயன்படுத்த முடியாத நிலை தொடர்ந்தது.

இந்நிலையிலேயே ட்ரம்பின் ட்விட்டர் கணக்கை மீள செயற்படுத்துவது தொடர்பில் ஆராய்வதாக தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேலில் அல்ஜசீரா ஊடகவியலாளர் படுகொலை



இஸ்ரேலின் ஆக்கிரமிப்புள்ள மேற்கு கரையில் அல்ஜசிரா பத்திரிகையாளர் ஷிரின் அபு என்பவர் நேற்று சுட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளார். அகதிகள் முகாமில் இஸ்ரேல் இராணுவம் நிகழ்த்திய தாக்குதலில் ஷிரின் அபு பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டார். அங்கு இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் அவர் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# முதல் அணியாக ப்ளேஓப் தகுதிபெற்ற குஜராத்

லக்னோ சுப்பர் ஜயண்ட்ஸ் அணிக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் 62 ஓட்டங்களினால் அபார வெற்றிபெற்ற குஜராத் டைட்டன்ஸ் அணி நடப்பு ஐ.பி.எல். தொடரில் முதல் அணியாக ப்ளேஓப் சுற்றுக்கு தகுதிபெற்றது.

ஐ.பி.எல். தொடரின் 57ஆவது லீக் ஆட்டத்தில் ஹார்டிக் பாண்டியா தலைமையிலான குஜராத் டைட்டன்ஸ் மற்றும் கே.எல்.ராகுல் தலைமையிலான லக்னோ சுப்பர் ஜயண்ட்ஸ் அணிகள் நேற்று முன்தினம் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி 4 விக்கெட்டுகளை இழந்து 144 ஓட்டங்களை குவித்தது. இதனைத் தொடர்ந்து 145 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய லக்னோ அணி 13.5 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 82 ஓட்டங்கள் மட்டுமே பெற்றது.



இதன்மூலம் 62 ஓட்டங்கள் வித்தியாசத்தில் குஜராத் அணி வெற்றிபெற்றது. இந்த வெற்றியின் மூலம் குஜராத் அணி புள்ளிப்பட்டியலில் மீண்டும் முதல் இடத்திற்கு முன்னேறியதுடன், 2022 ஐ.பி.எல். தொடரில் ப்ளேஓப் சுற்றுக்கு தகுதி பெற்ற முதல் அணி என்ற பெருமையை பெற்றது. இந்தாண்டு புதிய அணியாக உருவெடுத்த குஜராத் அணி முதல் ஆண்டிலேயே ப்ளேஓப் சுற்றுக்கு தகுதிபெற்றமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

# இலங்கையை எதிர்கொள்ளவுள்ள பங்களாதேஷுக்கு பெரும் பின்னடைவு



பங்களாதேஷ் அணியின் முன்னணி சகலதுறை வீரரான சகீப் அல்-ஹஸனுக்கு கொவிட்-19 தொற்று உறுதியான நிலையில் சுற்றுலா இலங்கை அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் அவர் விளையாட மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சகீப் அல்-ஹஸன் அமெரிக்காவிலிருந்து திங்கட்கிழமை நாடு திரும்பியிருந்த நிலையில் அவருக்கு மேற்கொள்ளப் பட்ட கொவிட்-19 பரிசோதனையில் அவருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டதாகவும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை குறிப்பிட்டுள்ளது.

எனவே, சகீப் அல்-ஹஸன் கொவிட்-19 விதிமுறையின்படி, தனிமைப்படுத்தலில் இருந்து சிகிச்சைகளை பெற்றுக்கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் சகீப் அல்-ஹஸனால் இலங்கை அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் விளையாட முடியாது என பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தகவல்கள் தெரிவித்துள்ளன. சகீப் அல்-ஹஸனின் இந்த வெளியேற்றம் பங்களாதேஷ் அணிக்கு மிகப்பெரிய பின்னடைவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பங்களாதேஷ் மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# டெஸ்ட் தொடருக்குப் பதிலாக ஒருநாள், T20 தொடர்கள்



முழு உலகிலும் ஏற்பட்ட கொவிட்-19 தொற்று நோய் காரணமாக கடந்த ஆண்டு ஒத்திவைக்கப்பட்ட தென்னாபிரிக்க - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையேயான டெஸ்ட் தொடருக்குப் பதிலாக ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 போட்டிகள் நடைபெறும் அடிப்படையில் போட்டி அட்டவணை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2021இல் நடக்கவேண்டிய தென்னாபிரிக்க, அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையேயான 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடருக்குப் பதிலாக 5 ஒருநாள் மற்றும் 3 இருபதுக்கு 20 போட்டிகள் மாற்றப்பட்டுள்ளன. 2023 ஒருநாள் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கு தயாராகும் விதத்தில் இப்போட்டிகளை மாற்றி அமைத்ததாக தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை கூறியுள்ளது.




# “ஐ.பி.எல்லில் கோடிக்கணக்கில் பணத்தை வாரி வழங்கினால் யார் டெஸ்ட் ஆட விரும்புவர்”

## - யுவராஜ் சிங்

சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமே ஆகாத வீரருக்கு ஐ.பி.எல். கிரிக்கெட்டில் கோடிக்கணக்கில் பணத்தை வாரி வழங்கினால் எந்த இளம் வீரர் வந்து டெஸ்ட் ஆட விரும்புவார் என இந்திய அணியின் முன்னாள் சகலதுறை வீரர் யுவராஜ் சிங் கேள்வி எழுப்பியுள்ளார்.

இருபதுக்கு 20 கிரிக்கெட்டின் வருகைக்குப் பிறகு டெஸ்ட் கிரிக்கெட் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்துவருவதான ஒரு கருத்து நீண்ட காலமாக இருந்துவருகிறது. அதிலும் குறிப்பாக ஐ.பி.எல். போன்ற லீக்குகளின் அறிமுகத்திற்கு பிறகு டெஸ்ட் கிரிக்கெட் பயங்கரமாக நலிவடைந்துவிட்டது.

உலகம் முழுவதும் பல்வேறு இருபதுக்கு 20 லீக் தொடர்கள் நடத்தப்படுகின்றன. மற்ற அனைத்தையும் விட ஐ.பி.எல்தான் அதிக பணம் புழங்கும் பணக்கார லீக் தொடர். அதனால் ஐ.பி.எல்லில் இளம் வீரர்கள்முதல் சீனியர் வீரர்கள்வரை, அறிமுகமில்லாத வீரர்கள்முதல் பிரபலமான வீரர்கள் வரை என பாரபட்சமின்றி அனைவருக்கும் கோடிகளில் கொட்டி கொடுக்கப்படுகிறது. சர்வதேச கிரிக்கெட்டில் சாதித்த அல்லது குறைந்தபட்சம் முகம் அறிமுகமான வீரர்களுக்கு கோடிகள் கொட்டிக் கொடுக்கப்பட்டாலும் பரவாயில்லை. சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமே ஆயிராத இளம் வீரர்களுக்கெல்லாம் கோடிகள் கொட்டி கொடுக்கப்படுகின்றன.

இதுகுறித்து கருத்து கூறியுள்ள யுவராஜ் சிங், டெஸ்ட் கிரிக்கெட் செத்துக்கொண்டிருக்கிறது. மக்கள் இருபதுக்கு 20 கிரிக்கெட்டை பார்க்கத்தான் ஆர்வம் காட்டுகிறார்கள். வீரர்களும் இருபதுக்கு 20 போட்டிகளில் ஆடத்தான் ஆர்வம் காட்டுகிறார்கள். சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமாகாத வீரர்கள் கூட ரூ.7-10 கோடி சம்பாதிக்கும்போது, அவர்கள் ஏன் 5 நாட்கள் விளையாடி 5 இலட்சம் ரூபா ஊதியம் பெற வேண்டும் என நினைக்கப்போகிறார்கள்? என கேள்வி எழுப்பியுள்ளார் யுவராஜ் சிங்.





# “2022 20 உலகக்கிண்ணத்தில் இலங்கை அணி சாதிக்கும்”

## - மஹேல நம்பிக்கை

இந்தாண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை அணி சாதிக்குமென நம்புவதாக இலங்கை கிரிக்கெட் அணியின் ஆலோசக பயிற்சியாளரான மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரில் இலங்கையின் பல இளம் வீரர்கள் திறமையினை வெளிப்படுத்தியிருந்த நிலையில், குசல் மெண்டிஸ் மற்றும் தனுஷ்க குணதிலக்க போன்ற துடுப்பாட்ட வீரர்களின் வருகை இலங்கை அணியை அவுஸ்திரேலிய மண்ணில் பலப்படுத்தும் என நம்புவதாகவும் மஹேல குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், “பானுக ராஜபக்ஷ முன்வரிசைக்காக இருக்கின்றார். பெத்தும் நிஸ்ஸங்கவிற்கும் சிறந்த உலகக்கிண்ணம் ஒன்று அமைந்திருந்தது. சரித் அசலங்கவும் பிரகாசித்திருந்தார். எனவே, எம்மிடம் மிகவும் தாக்குதலான துடுப்பாட்டத் தொகுதியொன்று இருக்கின்றது. இதில் பல இளம் வீரர்கள் இரண்டாவது உலகக் கிண்ணத்தை எதிர்பார்த்திருப்பதோடு, அந்த வீரர்களே இலங்கையை முன்னோக்கிக் கொண்டுசெல்பவர்களாகவும் இருக்கின்றனர்.”

“வனிந்து ஹஸரங்க முக்கிய வீரராக இருப்பார். அவர் தற்போதைய கிரிக்கெட் உலகில் காணப்படுகின்ற சிறந்த சகலதுறை வீரர்களில் ஒருவராக உள்ளார். துஷ்மந்த சமீர மிகவும் வெற்றிகரமான ஒரு பந்துவீச்சாளராக மாறியிருக்கின்றார். இலங்கைக்கு உலகக் கிண்ணத்தில் பந்துவீச்சுத்துறையானது முக்கியமானதாக இருக்கும், எனவே, ஹஸரங்கவும், சமீரவும் துருப்புச்சீட்டாக இருப்பார்கள். மஹீஷ் தீக்ஷனவும் இலங்கைக்கு இருக்கும் மற்றுமொரு சொத்து, எனவே, இந்த மூன்று வீரர்களும் இலங்கைக்கு முக்கியமானவர்களாக காணப்படுவர்'' - என தெரிவித்தார்.

# தேசிய கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடர் ஒத்திவைப்பு

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகிய தேசிய கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரை காலவரையறையின்றி ஒத்திவைப்பதற்கு இலங்கை மெய்வல்லுனர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை மற்றும் அதனைத் தொடர்ந்து பிறப்பிக்கப்பட்ட பொலிஸ் ஊடரங்கு காரணமாக தேசிய கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடர் இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குப் பிறகு மீண்டும் தேசிய கனிஷ்ட மெய்வல்லுனர் தொடரை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இலங்கை பாடசாலைகள் கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்டு வந்த 20 வயதின்கீழ் கூடைப்பந்தாட்டப் போட்டிகளும் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# திருகோணமலை ஜமாலியா விளையாட்டுக் கழகம் சம்பியனாக தெரிவு

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை அருணகிரி இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியொன்று திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இச்சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டிக்கு ஜமாலியா விளையாட்டுக் கழகமும், ஈஸ்டன் ஈகில் விளையாட்டுக் கழகமும் தெரிவாகின. இறுதிப் போட்டியில் இரண்டு கழகங்களும் மோதி இறுதியில் 2-0 என்ற கோல் கணக்கில் ஜமாலியா விளையாட்டுக் கழகம் வெற்றிக்கிண்ணத்தினை தனதாக்கியது.

இதன்போது இளைஞர் சேவை அதிகாரியினால் வெற்றிக்கிண்ணம் மற்றும் அதிக கோல்களை அடித்த வீரருக்கும் வெற்றிக்கிண்ணமும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் அருணகிரி இளைஞர் கழகத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.



# கைவிடப்பட்ட உலகக்கிண்ண தகுதிச் சுற்றுப்போட்டியை நடத்த முடிவு

(அக்ஷரா)

2022 உலகக்கிண்ண தகுதிச் சுற்றில் பிரேஸில், ஆர்ஜென்டீனா ஆகிய அணிகள் மீண்டும் விளையாட வேண்டும் என்று பீபா தெரிவித்துள்ளது. உதைபந்தாட்ட சங்கங்களின் முறையீட்டைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக விளையாட்டு நிர்வாகக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் அமெரிக்க போட்டியாளர்கள் கடந்த செப்டெம்பரில் தகுதிச் சுற்றில் விளையாட திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், ஆர்ஜென்டீனாவின் கொவிட்-19 விதிமீறல்கள் காரணமாக கிக்ஆஃப் செய்யப்பட்ட 10 நிமிடங்களுக்குள் போட்டி இடைநிறுத்தப்பட்டது. நவம்பர் 21 முதல் டிசம்பர் 18 வரை கட்டாரில் நடைபெறவுள்ள உலகக்கிண்ண தென்அமெரிக்க மண்டல தகுதிச் சுற்றில் அணிகள் முறையே முதல் மற்றும் இரண்டாவது இடத்தைப் பிடித்தன.

பீபா அபராதம் விதித்ததைத் தொடர்ந்து இரண்டு சங்கங்களும் பெப்ரவரியில் மேல்முறையீடுகளைச் சமர்ப்பித்தது மற்றும் போட்டியை மாற்றியமைக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தது. “இரு தரப்பினரின் சமர்ப்பிப்புகளையும் பகுப்பாய்வு செய்த பின்னர், அனைத்து சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு, மேன்முறையீட்டு குழு போட்டி மீண்டும் விளையாடப்படும் என்பதை உறுதிப்படுத்தியது'' என்று பீபா தெரிவித்துள்ளது.

கைவிடப்பட்டதால் இரு சங்கங்களுக்கும் 50,000 அமெரிக்க டொலர் அபராதத்தை குழு உறுதிசெய்ததாக சூரிச் சார்ந்த நிறுவனம் கூறியது. ஆனால் பிரேஸில், ஆர்ஜென்டீனா



ஆகியவற்றின் மீது விதிக்கப்பட்ட 5,00,000 அமெரிக்க டொலர், 2,00,000 அமெரிக்க டொலர் கூடுதல் அபராதம் பாதியாக குறைக்கப்பட்டதாக பீபா தெரிவித்தது. அவுஸ்திரேலிய மாநிலமான விக்டோரியாவிலுள்ள அதிகாரிகள் ஜூன் மாதம் மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் பிரேஸில், ஆர்ஜென்டீனா அணிகள் நட்பு ரீதியாக சந்திக்கும் என்று அறிவித்தனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7